# ஈழத்துத் தமிழ் நாவல்களில் இன உறவு

கலாநிதி . மயில்வாகனம் - இரகுநாதன்.

M.A;Ph.D

# ஈழத்துத் தமிழ் நாவல்களில் இன உறவு

கலாநிதி . மயில்வாகனம் - இரகுநாதன்.
**M.A;Ph.D**

# நூல் விபரம்

தலைப்பு : ஈழத்துத் தமிழ் நாவல்களில்-
இனஉறவு.

ஆசிரியர் :கலாநிதி : மயில்வாகனம்- இரகுநாதன்.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

முதல் பதிப்பு : 2007 ஆனி.

தாள் : 70 gram Bank Paper.

பக்கம் : 100 + ix

எழுத்து : 12 புள்ளி

கணினி அச்சமைப்பு: எஸ். எஸ்.ஆர். பிரின்டேர்ஸ்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

விலை : 250/=

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | - iv - vi |
| | வாழ்த்துரை | - vii - ix |
| 1. | ஈழத்துத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் தமிழ் - சிங்கள இன உறவு. | - 1 - 31 |
| 2. | ஈழத்துத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் மனித உரிமை மீறல்கள். | - 32 - 55 |
| 3. | ஈழத்துத் தமிழ் நாவல்களில் தமிழ்த் தேசிய உணர்வின் வெளிப்பாடுகள் | - 56 - 79 |
| 4. | போர்க்கால வாழ்வின் அவலங்கள். | - 80 - 100 |

# முன்னுரை.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் தான் பிறந்த உலகில் சுதந்திரமாகவும் கண்ணியத்தோடும் வாழ்கின்ற உரிமை உள்ளது. அதிகாரத்தாலும் ஆயுதத்தாலும் ஒருவன் மற்றொருவனின் உரிமையைப் பறிக்க முற்படுகின்றபோது அமைதியான வாழ்வு அவலம் நிறைந்ததாக மாறிவிடுகின்றது. இலங்கையிலே அமைதியோடு வாழ்ந்த வாழ்வு இன்று அனைவருக்கும் அவலம் நிறைந்தவாழ்வாக மாறிவிட்டது. புத்தன் அன்பைப் போதித்த மண்ணிலே மனிதர்களின் இரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கின்றது.

"தாயி னூவாக் குழவிபோல
ஓவாது கூஉநின் னுடற்றியோர் நாடே"
புறம் (4: 18-19)

அதாவது தாயை இழந்து பசியால் அழுகின்ற குழந்தையைப் போல ஓயாது அலறிப் பாழாகும் உனது நாடு என்று புறநானூற்றுப் புலவன் ஒருவன் இட்ட சாபம் பாதை தவறி வந்து எமது மண்ணிற் பலித்தது போல இலங்கையில் அமைதியான வாழ்வு மறைந்து எங்கும் அவலக்குரலே ஓயாது ஒலிப்பது காதில் கேட்கிறது.

இலங்கையில் வாழ்கின்ற சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம்

உடையவர்கள். தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் பாரம்பரியமாக வாழ்ந்து வருபவர்கள். சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் வடஇலங்கை தமிழர்களின் ஆட்சிக்குட்பட்டதாகவே இருந்து வந்துள்ளது. சுதந்திர இலங்கையிலும் தமிழ்மக்கள் சகல கௌரவத்தோடும் கண்ணியத்தோடும் வாழ்ந்த நாட்களும் இல்லாமல் இல்லை; ஆனால் இந்நிலை நீடிக்கவில்லை. இன, மத, மொழி, வேறுபாடுகளுக்கப்பால் ஒன்றுபட்டு வாழ்ந்த மக்கள் வகுப்புவாத அரசியல் வாதிகளின் கபடத்தனத்தால் பகைவர்களாக்கப்பட்டனர். ஒரு தாயின் புதல்வர்களாய் ஒன்றுபட்டு வாழ்ந்தவர்கள் பகைகொண்டு தமக்குள் மோத முற்பட்டபோது இலங்கை யுத்த பூமியாகவே மாறியது. ஆயுதவிற்பனைக்காரர்கள் மகிழ்ந்து ஆரவாரிக்க இலங்கையில் யுத்த விமானங்கள் குண்டு மழைபொழிய எங்கும் ஒரே அவலக்குரல்; இது விதியா? இந்த விதியை மாற்றவே முடியாதா?

இந்நூலிலுள்ள கட்டுரைகள் அனைத்தும் ஈழத்துத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்டனவாகவே எழுதப்பட்டுள்ளன. நாவல் ஒரு வகையில் கதை கூறும் இலக்கியந்தான் ஆனால் நாவலில் கூறப்படுகின்ற கதை வெறுங்கற்பனைக் கதையாக இருந்து விடுவதில்லை. இது சமூக மெய்ம்மையிலிருந்து பிறந்த கதை. சமூகத்தில் வாழும் மாந்தர்களை வகை மாதிரியாகக் கொண்டும், நிகழ்ந்த, நிகழத்தக்க சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டும் அது கூறுகின்ற கதை வெறும் கற்பனைக் கதையல்ல. எனவே இக்கட்டுரைகளினூடாக எம்மோடு

பேசுபவர்கள் எமது சமூகத்தில் எம்மோடு வாழ்பவர்களே; இதனால் இவை மக்களின் குரலாகவே கருதப்படவேண்டியவை. இந்த மக்களின் மனக் குமுறல்களை ஒருங்கே கேட்கின்றபோது அவற்றினூடாக எமக்கு ஏதோ ஒரு செய்தி உணர்த்தப்படுமானால் அதுவே இந்நூலின் வெற்றியாகவும் இருக்கலாம்.

இறுதியாக இந்நூலுக்கு தக்கதொரு வாழ்த்துரையினை வழங்கி அணி செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் தலைவர் பேராசிரியர் - கலாநிதி.எஸ். சிவலிங்கராஜா அவர்களும் இந்நூலை அழகிய முறையில் கணினிப் பதிப்பாக வடிவமைப்பதில் ஆர்வத்தோடு உழைத்த S.S.R. பிறின்டேஸ் உரிமையாளரும் ஊழியர்களும் எனது நன்றிக்குரியவர்கள்.

கலாநிதி ம. இரகுநாதன்.

# வாழ்த்துரை

கலாநிதி ம. இரகுநாதன் எமது துறையிலே முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். இவர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப்பாடமாகப்பயின்று முதற் பிரிவிலே சித்தியெய்தியவர். முல்லைத்தீவு மாவட்டத்திலே ஏட்டு வடிவில் வழங்கிவந்த கோவலனார் கதையைப் பேராசியர் ஆ. வேலுப்பிள்ளையின் வழிகாட்டலில் ஆய்வுப்பதிப்பாக வெளிக் கொணர்ந்து முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றவர்.

நவீன தமிழ் இலக்கியங்களிலே அதிக ஈடுபாடு கொண்ட இவர் ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச்சிக்கல்கள் என்னும் பொருளிலே ஆய்வு செய்து கலாநிதிப்பட்டம் பெற்றவர்.

கலாநிதி. ம. இரகுநாதன் புனைகதை இலக்கியம் பற்றி மாணவர்களுக்குப் போதித்து வருகின்றார். இயல்பாகவே ஆய்வுத் தேடல் உடையவரான இவர் இடைவிடாது வாசிக்கும் பழக்கத்தினைக் கொண்டவர். நவீன இலக்கிய ஆய்வாளனொருவன் தொடர்ந்து வாசித்துக் கொண்டிக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்பவர்.

இவர் தனது சிறப்பாய்வுத் துறையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட நாவல் இலக்கியத்தின் வழி

நின்று இக்கட்டுரைத் தொகுதியைத் தருகின்றார். இத்தொகுப்பில் இடம் பெறும் கட்டுரைகள் ஈழத்துச் சமகாலப் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்டவை.

சமகாலப்பிரச்சினைகளை ஈழத்து நாவல்களின் வழிநின்று எடுத்துக்காட்டும் இந்நூலாசிரியர் மிகுந்த அவதானத்துடனேயே தமது கருத்து நிலையை முன்வைக்கின்றார். பெரும்பாலும் நாவல்கள் இன்ன இன்ன விடயங்களைச் சொல்லுகின்றன என்பதைப் பொருத்தமான மேற்கோள்களுடன் சுட்டிக்காட்டித் தமது கருத்தினை மிக இலாவகமாகத் தொட்டுக்காட்டியுள்ளார்.

இத்தொகுப்பில் இடம் பெறும் கட்டுரைகள் யாவும் இன்றைய பிரச்சினை மையங்களின் தோற்றத்தினையும் தொடர்ச்சியினையும் நாவல்களின் வழிநின்று ஆய்வு செய்கின்றன. ஆய்வாளரின் நோக்கு நிலை ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும் முன் வைக்கப்படுகின்றது.

உதாரணமாக ஈழத்துத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் தமிழ் சிங்கள இன உறவு என்ற கட்டுரையின் இறுதிப் பகுதியிலே நூலாசிரியர் gpd; tUkhW Fwpg;gpLfpd;wh; “அரசியல் வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட பகைமை உணர்வினையும் இன, மொழி ரீதியான முரண்பாடுகளையும் புறந்தள்ளி சம உரிமையும் அந்தஸ்த்தும் உள்ளவர்களாக இணைந்து வாழ இம்மக்கள் என்றும் தயாராகவே இருக்கின்றார்கள் என்பதும் எமக்கு உணர்த்தப்படுகின்றது. எனவே வகுப்பு

வாத அரசியல் வாதிகள் தமது சுயநலப் போக்கினை விடுத்து தேசத்தின் நலனில் அக்கறை செலுத்த முற்பட்டால் அன்பும் அறமும் அர்த்தமுடையனவாகி மீண்டும் இங்கே வசந்தம் துளிர்க்கும்."

இந்நூலாசிரியரின் நோக்கு நிலையைக் கண்டறிய மேற்காட்டிய பகுதி துணைபுரிகின்றது. இவ்வாறே ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும் தமது கருத்தினைத் தெளிவாகவும் விளக்கமாகவும் முன்வைக்கின்றார்.

இத்தொகுப்பில் இடம் பெறும் ஒவ்வொரு கட்டுரையும் சமூக அரசியல் வரலாற்றினை ஏதோஒரு வகையிலே துலக்கிக் காட்டுவனவாக அமைகின்றன எனலாம்.

ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றையெழுதிய பயிற்சியும் தேர்ச்சியுமுடைய இந்நூலாசிரியர் இன்னும் இத்தகைய பல தொகுப்புக்களை வெளியிட வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்குரிய தகுதியும் திறமையும் அவரிடம் உண்டு. அவரது பணிகள் சிறக்க வாழ்த்துகிறேன்.

பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா
தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

15/07/2007

# 1. ஈழத்துத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் தமிழ் சிங்கள இன உறவு.

இலங்கையில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையிலிருந்த சிங்கள, தமிழ் அரசுகளிடையே அரசியல், பொருளாதார விடயங்களில் முரண்பாடுகள் நிலவியபோதும் அவை இன, மொழி அடிப்படையிலான மோதல்களை எற்படுத்தியதாகத் தெரியவில்லை. 19ஆம் நூற்றாண்டில் முழு இலங்கையும் பிரித்தானியாவின் ஆட்சியதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட நிலையில் 1833 இல் கொண்டுவரப்பட்ட கோல்புறூக்கின் அரசியல் சீர்திருத்தம் தனித்தனியாக இருந்த இராச்சியப் பிரிவுகளை ஒன்றிணைத்து ஒரே இலங்கை என்ற அமைப்பை உருவாக்கியது. இவ் அமைப்பில் இருந்த சட்டவாக்க சபையில் 1920 வரை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் சமஅளவு பிரதிநிதித்துவமே வழங்கப்பட்டு வந்தது. 1921 இல் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தால் சட்டவாக்கசபையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டது. இதுவே தமிழர்களை இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பில் நம்பிக்கையினை இழக்க வைத்த முதலாவது சந்தர்ப்பம் எனலாம். இதன் பின்னரான இலங்கையின் அரசியல் வராலாற்றில் இனரீதியான முரண்பாடுகளும் மோதல்களும் வளர்ந்து சென்றதையே காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய உறவுநிலையினை இரு இன மக்களும் இணைந்து வாழ்கின்ற பகுதிகளில் சிறப்பாக அவதானிக்க முடிகின்றது. இதனை ஈழத்தில் வெளிவந்த

சில நாவல்களிலும் அவதானிக்க முடிகின்றது. இக்கட்டுரையில் இவ்வாறான நாவல்களினூடாகப் புலப்படும் இனஉறவின் தன்மைகளைத் தேடும் முயற்சியே மேற்கொள்ளப்படுகின்றது.

சுதந்திர இலங்கையில் 1956 இல் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக்கலவரங்களும் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் அதன் விளைவாக அவர்களின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றத்தினையும் மு.தளையசிங்கத்தின் " ஒருதனிவீடு"[1] என்ற நாவல் பிரதிபலிக்கின்றது. இந்நாவலில் வருகின்ற தமிழரசுக்கட்சி ஆதரவாளனான சிங்கராசன் என்ற இளைஞன்,

" உரிமையைக் கேட்டது தான் எங்கட குற்றம்; அதற்காக அவங்க அடிக்கிறாங்க. அதுதான் பெரும்பான்மை ஆட்சி. அந்த ஒரு காரணமே போதும் அவங்க தயவில் நாங்க இருக்கக் கூடாது என்பதற்கு, அந்த ஒண்டே போதும் அவங்களை நம்பி நாங்க வாழக்கூடாது என்பதற்கு, இனி நாங்க ஒரு சமஷ்டி கேட்கக் கூடாது, மாஸ்டர், இனித் தனித் தமிழ்நாடு கேட்பது, அதற்காகப் போராடுவது தான் தமிழன் செய்ய வேண்டிய வேலை. அதில் வரும் கஷ்டங்களைத் தவிர்க்க முடியாது. ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. சரித்திர நியதி அது. சுதந்திரம் கிடைக்கின்ற வரைக்கும் போராடுவோம்.....[2]

"நமக்கு ஒரு நாடும் அரசும் ஒரு கூட்டாட்சியின் கீழ் தரமறுத்தால் ஒரு தனிநாடு அல்லது கடல் கடந்த ஒரு பரந்த தமிழ் நாட்டின் கூட்டாட்சியாவது அமைக்க வேண்டும். அதற்காகவாவது போராடுவோம். மறைமுகமான ஒரு 'அண்டர் கிறவுண்' பயங்கர இயக்கமாவது அமைத்துப் போராடுவேன். [3]

என்று கூறுவது இனமோதல்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளின் குறிப்பாகத் தமிழரசுக்கட்சியின் அரசியல் நோக்கத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழரசுக் கட்சியினரின் அரசியல் நோக்கங்கள் இவ்வாறு அமையினும் தமிழ் இடது சாரிகள் 1960களிலும் ஒற்றையாட்சிக்குள் இன ஐக்கியத்தோடு வாழும் அபிலாசையினையே கொண்டிருந்தனர். இதனாலேயே இடதுசாரியினரான முற்போக்கு அணியினர் தமது இலக்கியங்களினூடாக இன ஐக்கியத்தை வெளிப்படுத்தினர். முற்போக்கு அணியின் மூத்த படைப்பாளியான இளங்கீரனின் நீதியேநீகேள் [4] என்னும் நாவலில் இன ஐக்கியத்தை வலுப்படுத்தும் வகையில் இனக்கலப்புமணம் எடுத்துக் காட்டப்படுகின்றது. சிங்கள டாக்டரான பிரேமதாசா, யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்ணான தவமணியைத் திருமணம் செய்கின்றார். இத்திருமணத்தினூடாக இனஉறவில் ஏற்பட்டுள்ள விரிசல்களும் அவற்றின் அர்த்தமில்லாத தன்மையும் எடுத்துக்காட்டப்படுகின்றது. கதைப்போக்கில் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாகத்

தன்னிடம் ஓடிவந்துவிட்ட தவமணியை ஏற்றுக்கொண்ட டாக்டர் பிரேமதாசா தவமணியைத் தேடிவரும் அவளின் பெற்றோர்களை மரியாதையோடு வரவேற்கக் காத்திருக்கின்றார். ஆனால் தவமணியின் பெற்றோர்கள் இனத்துவேசத்தை வெளிப்படுத்தி அவளைப் பிரித்தெடுத்து விடவே முயல்வார்கள் என்பது தவமணியின் வார்த்தைகளினூடாகவே காட்டப்படுகின்றது.

"நீங்கள் அவர்களை மரியாதையோடும் மதிப்போடும் வரவேற்றாலும் அவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்த மாட்டார்கள். உங்கள் மேல் துவேசத்தைக் கக்குவார்கள். உங்களிடம் இருந்து என்னை எப்படியாவது பிரித்தெடுப்பார்கள்.....[5]

என்று தவமணி கூறுகின்றாள். அவளும் பிரேமதாசாவும் பதிவுத் திருமணம் செய்துவிட்டதை அறிந்த தவமணியின் தந்தை,

"பெற்று வளர்த்தவர்களை யெல்லாம் துச்சமாக மதித்து விட்டு இந்தச் சிங்களவனைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்"[6]

என்று கூறுகின்றார். மேலும் தவமணிக்கு ஆதரவாக இருந்த சகோதரன் கணேசைப் பார்த்து,
"இந்தச் சிங்களவன் தான் உனக்கு மச்சான், அவளுக்குப் புருசன், இனம், சொந்தம் எல்லாம். எனிமேல் நீங்கள் என்கண்களில் விழிக்கவும் வேண்டாம்.

நானும் சாகும் வரை உங்கள் கண்களில் விழிக்க மாட்டேன்”......[7]

என்றும் கூறுகின்றார். இவரின் வார்த்தைகளில் பெற்றமகள் தமது விருப்பத்திற்கு மாறாக இன்னொருவனைத் திருமணம் செய்து கொண்டதால் ஏற்பட்ட ஆத்திர உணர்வுக்கு மேலாக அவள் சிங்களவனைத் திருமணம் செய்து விட்டாளே என்ற இனவிரோத உணர்வே மேலோங்கி இருப்பதை உணரமுடிகின்றது.

இன்னொரு பக்கத்தில் பிரேமதாசாவைத் தனது மகள் குஸ்மாவுக்குத் திருமணம் செய்து வைக்கக் காத்திருந்த மாமனாரின் குடும்பத்தினரும் பிரேமதாசா மீது ஆத்திரப்படுகின்றனர். அவன் தமிழ்ப்பெண்ணைத் திருமணம் செய்து விட்டதை அறிந்த குஸ்மாவின் தாய், “இது பெரிய அவமானம்” என்று எரிச்சலோடு கூறுகின்றாள்.[8]

குஸ்மாவின் தந்தை,

“டேய், நீ தமிழ்க்குட்டியைக் கல்யாணம் செய்வதை நான் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்.நம்ம குடும்பத்திற்கு, சாதிக்குக்கேடு உண்டாக நான் விடமாட்டேன். [9]

என்று ஆத்திரத்தோடு கூறுகின்றார். பிரேமதாசாவை அதுவும் ஒரு டாக்டரை மருமகனாகப் பெறமுடியாது

போன ஏமாற்றம் இவர்களின் கோபத்தை நியாயப்படுத்தலாம். ஆனால் குஸ்மா,

"அவருக்கு இஷ்டமில்லையென்றால் வற்புறுத்த வேண்டாம். அவரைத் திட்ட வேண்டாம்." [10]

என்று கூறுகின்றாள். இது குஸ்மாவின் குரோதமற்ற மனநிலையை உணர்த்துகின்றது. அவள் இன உணர்வோடு இவர்களை நோக்கவில்லை. இது இளைய தலைமுறையினரின் மனநிலைக்கு எடுத்துக் காட்டாகலாம். ஆனால் மூத்த தலைமுறையினரிடையே இன உணர்வும் காணப்படுகின்றது; எனினும் இது சுயநலத்தின் அடியாகப் பிறந்தது. இளைய தலைமுறையினர் சுயநலத்தைக் கடந்து தமது வாழ்க்கையைத் தாமே தீர்மானிக்க முற்படும் போது புதிய சமூக மாற்றங்கள் ஏற்பட வாய்பு உண்டாகின்றது; அதன் மூலமே நல்லதொரு சூழல் உருவாகும் என்பது இந்நாவலினூடாக உணர்த்தப்படுகின்றது.

எழுபதுகளில் வெளிவந்த சாந்தனின் 'ஒட்டுமா''[11] என்னும் குறுநாவலில் இனக்கலப்பு மணத்தால் இரு இனங்களும் தத்தமது தனித் தன்மைகளை இழக்க நேரிடும் என்ற கருத்து எடுத்துக்கூறப்படுகின்றது. கதைப்போக்கில் கட்டுப்பெத்தவிற்குக் கல்வி கற்கச் சென்ற யாழ்ப்பாணத்துத் தமிழ் இளைஞனான சதா இங்குள்ள சிங்கள வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த போது அவ்வீட்டுப் பெண்ணான நிலாந்தியைக் காதலிக்கின்றான் இக்காதலுக்கு இரு புறத்திலும் எதிர்ப்பு ஏற்பட்டு அது

தோல்வியில் முடிவதாகக் கூறப்பட்டாலும் இத்தோல்விக்குக் காரணம் இது இனக்கலப்பு மணம் என்பதே ஆகும். இக்காதல் கதையினூடாக சிங்கள-தமிழ் இன உறவு நிலையும் எடுத்துக்காட்டப்படுகின்றது. நிலாந்தியின் தந்தையான பீரிஸ் யாழ்ப்பாணத்தில் வேலை செய்ய விரும்பாததற்கான காரணம் அங்கே சிங்களவர்களை மதிக்கமாட்டார்கள் என்ற எண்ணமே. பீரிசின் மற்றொரு மகளான லலிதா,

> "அங்கே எங்கட ஆட்கள் வந்தால் சிரட்டையில் தான் தண்ணீர் கொடுப்பார்களாமே." [12]

என்று கூறுகின்றாள். இது சிங்கள மக்கள் மத்தியில் இருந்த யாழ்ப்பாணத்தவர் பற்றிய கருத்து நிலையாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

சதா-நிலாந்தி காதலுக்கு இரண்டு வெவ்வேறு இன மாங்கன்றுகளை ஒட்டிப் பெற்ற ஒட்டு மாம்பழத்தினுடைய அதீதசுவை பற்றிய கருத்து நிலையே பயன்படுத்தப்படுகின்றது. ஒட்டு மாம்பழத்தின் சுவையை இனக்கலப்பு மணத்தால் அனுபவிக்க சதாவும் நிலாந்தியும் ஆசைப்படுகின்றனர். இறுதியில் காதல் தோல்வியில் முடியும் போது ஒட்டுமாவினால் இரு இனங்களுமே தத்தமது தனித்தன்மைகளை இழக்க நேரிடும் என்ற ஆபத்து எடுத்துக் காட்டப்படுகின்றது. இனக்கலப்பு மணங்களை விரும்பிய பீரிஸ்,

> ஒட்டுமாமரம் அதைப்போல இனங்களும் சேர்ந்தால் தான் நல்லமனித இனம் உருவாக முடியும். எங்கட இந்த இலங்கையிலை, அடுத்த

சந்ததியும் அதற்கடுத்த சந்ததிகளும் புதுவலிமையும் திறமையுமுள்ளவர்களாகி, எங்கட நாட்டைச் சொர்க்கமாக்க முடியும்."[13]

என்ற கருத்துடையவராகக் காணப்படுகின்றார். ஆனால் நிலாந்தியைக் காதலிக்க முன்னர் சதா, இனக்கலப்பு மணங்களால் இரண்டு இனங்களும் தங்கள் தனித்தன்மையைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும். இரண்டு இனங்களும் தங்களுடைய தனித்தன்மையை காப்பாற்றிக் கொண்டு இணைந்திருப்பதுதான் நல்லது என்ற கருத்துடையவனாகவே காட்டப்படுகின்றான். சதா – நிலாந்தியைத் திருமணம் செய்ய விரும்பியபோது யாழ்ப்பாணத்திலுள்ள அவனின் தகப்பன்,

"ஊருலகம் என்ன சொல்லுமெண்டு யோசிச்சியோ? நாளைக்கு தங்கச்சியவையின்ர கதி என்ன ஆகுமெண்டு யோசிச்சியோ? "[14]

என்று கூறும் போது இனக்குரோத உணர்வு வெளிப்படாமல் சாதாரண கலப்பு மணத்தால் ஏற்படும் சிக்கலே வெளிப்படுத்தப்படுகின்றது.

மறுபக்கத்தில் நிலாந்தியின் தந்தை பீரிஸ் சதாவுக்கு,
"... நிலாந்தியின் வாழ்வில் குறுக்கிட முயலாதே! ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். எங்கட இரத்தங்கள் வெவ்வேறு அவை கலக்க முடியாது."[15]

எனக் கூறும் போது இனக்குரோத உணர்வே மேலெழுவது தெரிகின்றது.

இவர்களின் காதலை நிலாந்தியின் பெற்றோர் விரும்பவில்லை என்பதை அறிந்தபோது சதாவின் தகப்பன்,
"அவளின்ரை ஆக்களுக்கு மட்டுமில்லை; ங்களுக்கும் இதிலை விருப்பமில்லைத்தான். இதை நீங்கள் விட்டுவிடுறதுதான் எல்லோருக்கும் நல்லது....."
........உனக்குப் பின்னாலையிருக்கிற சகோதரங்களை யோசிச்சியா? நீ இப்படி ஒண்டைச் செய்தா, அதுகளின்ர காலத்திலை என்ன நடக்கும்? தமையன் வேறு இனத்தாளைக் கட்டியவன் எண்டபேரே போதும் - எங்களுக்காக வேண்டாம் அதுகளை மனதிலை வைச்சு யோசி" [16]

எனக்கூறும் போது யாழ்ப்பாணத்தில் கலப்புத் திருமணங்களால் ஏற்படும் சிக்கலே புலப்படுகின்றது. இதில் இனக்குரோத உணர்வு வெளிப்படவில்லை. ஆனால் சிங்களவனான பீரிஸ் கூறும் வார்த்தைகளில் இன உணர்வும் தொக்கி நிற்பது தெரிகின்றது. இன முரண்பாடு வலுப்பெற்ற சூழலில் எழுதப்பட்ட நாவல் என்பதால் ஆசிரியரின் பாத்திரச் சித்திரிப்பு இவ்வாறு அமைந்து விட்டது என்றே கருதவேண்டியுள்ளது.

அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' [17] என்னும் நாவல் 1973 இல் வெளிவந்தது. இந்நாவலின் களம் சிங்கள, தமிழ்,

முஸ்லீம் மக்கள் கலந்து வாழ்கின்ற கிழக்கிலங்கையின் திருகோணமலைப் பிரதேசமாகும். இந்நாவலின் ஆசிரியரும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவரே. இந்நாவலுக்கு முன்னுரை எழுதியுள்ள பேராசிரியர் கா.சிவத்தம்பி

"திருகோணமலைத் தமிழ் இளைஞன் ஒருவன் சிங்களப் பெண்ணொருத்தியைக் காதலித்துத் திருமணம் செய்வது பற்றியும் அத்திருமணத்தால் ஏற்படும் சிக்கல்கள் பற்றியும் எடுத்துக்காட்டுவதனூடாக 1956 க்குப்பின் ஈழத்தில் தோன்றி வளர்ந்துள்ள தமிழ் இளம்சந்ததியினரின் வாழ்க்கைப் பின்னணிபற்றியும் அவர்களை ஆட்கொள்ளும் கருத்துக்கள் பற்றியும், சிங்கள தமிழ் உறவின் தன்மைகள் பற்றியும் அவ்வுறவில் இன்று காணப்படும் போலிவிகற்பங்கள் பற்றியும் தமிழ்க்குடும்பங்களின் இலட்சியங்கள், வாழ்க்கை நடைமுறைகள் பற்றியும் இந்நாவல் ஆராய்கின்றது..."

"சிங்கள தமிழ் உறவுகளைச் சித்திரிப்பதே இந்நாவலின் சிறப்பமிசம் எனலாம். தேசிய ஒருமைப் பாட்டுணர்வினையே தனது கதை சுட்டும் பொருளாகக் கொண்டுள்ள அருள் சுப்பிரமணியம் சிங்கள தமிழ் மக்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள கருத்துக்களை, சிறப்பாகச் சிங்களவர் பற்றி தமிழ் மக்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள் என்பதை ஒழிவு மறைவின்றி எடுத்துக்காட்டுகின்றார். அப்படிக் காட்டுவதன் மூலம் அவ்வெண்ணங்களின் போலித் தன்மையையும் அவர் கூறாமலே கூறிவிடுகின்றார்." எனக் குறிப்பிட்டுள்ளார்.[18]

நாவலின் கதைப்போக்கினையும் சம்பவங்களையும் நோக்கும் போது பேராசிரியரின் கருத்து மேலும் தெளிவுபடுகின்றது. திருகோணமலைத் தமிழ் இளைஞனான அரியரத்தினம் விபரம் அறியாத பருவத்தில்

“தெருவில் போகும் சிங்களவர்களுக்குக் குறிவைத்து எறிய போத்தல்களுக்குள் அயல் பொடியன்களோடு சேர்ந்து மண் அடைத்து வைத்தவன்” [19]

ஆனால் கொழும்பில் சிங்களக் குடும்பம் ஒன்றுடன் பழக ஆரம்பித்த போது சாதி, மத, மொழி வேறுபாடுகளும் அவற்றினால் ஏற்படும் குரோதங்களும் அர்த்தமற்றவை என உணர்ந்து கொள்கின்றான்.

சிங்களப் பெண்ணான மொனிக்காவுக்கு அவளின் தாய், கீழான சின்னத்தனமான உணர்ச்சியான வகுப்புவாதக் கூச்சல்கள் அன்பென்னும் உயரிய உணர்ச்சிக்கு முன்னால் நிற்க முடியாது விழுந்துவிடும் என்று கூறியிருக்கின்றாள்” [20]

அரியரத்தினத்தின் சமூகச்சூழல் சற்று வித்தியாசமானது. விபத்தில் அடிபட்டது. சிங்களவன் என்றதுமே “சிங்களவனோ அவங்களுக்கு வேணும்” [21] எனக் கூறித் திருப்திப்படுகின்றவர்களோடு வாழ்ந்தவன் அவன். இந்தச் சூழலுக்குள் தான் தனது சிங்கள மனைவியை அழைத்து வரவேண்டிய இக்கட்டான நிலை அவனுக்கு ஏற்படுகின்றது.

அரியத்துடன் புகைவண்டியில் பிரயாணம் செய்யும் சித்திரவேலு மாஸ்டர்,

"இப்ப கவுண்மென்ட் ஜொப்ஸ் செல்லாம் முதலில சிங்கள ஆக்களுக்கு ...... அடுத்தது முஸ்ஸீம்களுக்கு....... பேந்துதான் மிச்சமிருக்கிற எங்களுக்கு. இப்பிடியே போனா எங்கட ஆக்கள் கவுண்மென்ட் சேவிசில இல்லாமல் போயிடுவினம்....."[22]

எனக் கூறிய போது அவரின் கருத்தை மறுத்த அரியம், மேற்கு நாட்டாரின் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக்கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணத் தமிழர்களே எல்லா அரசபதவிகளிலும் இருந்ததையும் தற்போது சிங்கள மக்களுக்கும் கல்வி கற்கின்ற வாய்ப்பு ஏற்பட்டதால் அவர்களும் முன்னேறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதை விளக்கிக் கூறுகின்றான். இது பொருளாதார ரீதியாக ஏற்பட்ட போட்டி நிலை இனக்குரோதமாக மாறியதற்கு எடுத்துக்காட்டாகவும் உள்ளது.

திரிகோணமலையில் வாழும் தமிழ், சிங்கள மக்களுக்கிடையிலான உறவு நிலையை அரியத்தின் நண்பன் பின்வருமாறு கூறுகின்றான்.

"திருகோணமலையில் எவ்வளவோ சிங்கள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற போதிலும், எங்களுடைய அயல் மக்கள் சிங்களமக்களோடு சரியாகப் பழகாதவர்கள். அந்தக்கட்சி, இந்தக்கட்சி

யென்று கட்சிகள் சொல்லும் வகுப்புவாத வழிமுறைகளில் சிந்தித்து வாழ்க்கை நடத்தும் இந்த வண்வேறபிக் மக்களிடத்தில நீ எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறாய். சிங்களவர்கள் எங்களுடைய சகோதரர்கள். அவர்களோடு நாங்கள் இணைந்து இருக்க வேண்டுமென்ற உண்மைகள் எனக்கும் உனக்குந்தான் தெரிந்திருக்கின்றது. ரயிலொன்று தடம்புரண்டு நூறுபேர் மரணம் என்ற செய்தி பத்திரிகையில் வந்தால் - இறந்தவர்களில் சிங்களவர் கூடவா தமிழர் கூடவா  என கூட்டல் கழித்தல் பார்த்து சிங்களவர் கூடவாக இருக்கும் போது அதில் ஒரு நிம்மதியும், தமிழர்கள் கூடவாக இருந்தால் அதில் ஒரு துன்பமும் அனுபவிக்கும் ஒரு சூழலில் வாழ்பவர்களல்லவா நமது மக்கள்...”[23]

இவ்வார்த்தைகள் திருகோணமலைச்சூழலைச் சிறப்பாக உணர்த்தினாலும் 1956 இன் பின்னர் ஏற்பட்ட இன உணர்வின் பொதுவான அம்சமாகவே உள்ளது. இவ்வாறான நிலையை அரசியல் கட்சிகளே உருவாக்கின என்ற கருத்தும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஞானரதனின் புதிய பூமி [24] என்னும் நாவல் 1977 இல் வெளிவந்தது. காட்டில் கூடாரங்கள் அமைத்து நில அளவைத் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கையும் தமிழ், சிங்கள தொழிலாளர்களுக் கிடையே இருந்த இனமுரண்பாடுகள் வர்க்க உணர்வின் முன் அற்றுப்போவதும் இந்நாவலில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து தமிழ் இளைஞனான ரவீந்திரன் சிங்களப் பெண்ணொருத்தியைக் காதலித்தபோது அவன் தமிழன் என்பதால் சிங்களவனான முதியான்சே இந்தக் காதலுக்குத் தடையாக இருக்கின்றான். ஆனால் காட்டில் முதியான்சே யானையால் தாக்கப்பட்ட போது ரவீந்திரன் தனது உயிரைப் பணயம் வைத்து அவனைக் காப்பாற்றுகின்றான். ரவீந்திரனால் காப்பாற்றப்பட்ட முதியான்சே, “ஒரு தொழிலாளி என்ற உறவுக்காக மட்டும் நீ இப்படி உயிரைப் பணயம் வைத்து என்னைக் காப்பாற்றியிருக்கிறாய். ஆனால் நானோ இன்று வரை உனக்கு என்ன செய்திருக்கிறேன். நீ தமிழன் என்பதற்காக உன்னை என்னுடைய எதிரியாக வெறுத்து வந்திருக்கிறேன். என்னுடைய மனச்சாட்சியே என்னைக் கொன்று விடும் போலிருக்கின்றது...'... நீயோ எல்லாவற்றையும் மறந்து விட்டு மனிதனாய் உயர்ந்து விட்டாய்...” [25]

எனக் கூறும் போது இன முரண்பாடுகளுக்கு அப்பால் வர்க்க உணர்வு எல்லோரையும் ஒன்றிணைப்பது தெரிகின்றது. எனவே வர்க்க உணர்வைப் பெறும் போது இன முரண்பாடு அற்றுப்போய்விடும் என்பது இந்நாவலினூடாக உணர்த்தப்படுகின்றது.

செங்கை ஆழியானின் ஒருமைய வட்டங்கள் [26] என்னும் நாவல் 1982 இல் வெளிவந்தது. இதன் கதைநிகழ்களமாக வன்னிப்பிரதேசத்தில் மூவின மக்களும் கலந்து வாழ்கின்ற செட்டிகுளப்பிரதேசம் அமைந்துள்ளது. இந்நாவலில் மூவினமக்களும் இன,

மத, மொழி வேறுபாடுகளின்றி இணைந்து வாழ்வதும், பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுப் போட்டிநிலை உருவாகியதாலும் அரசியல் கட்சிகளின் வகுப்புவாதப் பிரசாரங்களாலும் இன முரண்பாடுகள் ஏற்படுவதும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

புஞ்சிபண்டாவுக்கு காட்டு மாங்குளத்தில் வியாபாரம் செய்யக் கடைகிடைக்கவில்லை, அவரது மகனுக்கு கிடைக்காமல் போன கிராம சேவகர் பதவி ஒரு தமிழனுக்குக் கிடைத்திருக்கின்றது; இதனால் தமிழர்கள் மீதே ஆத்திரப்படுகின்றான் புஞ்சிபண்டா. தமிழர்களை காட்டு மாங்குளத்தில் இருந்தே துரத்த வேண்டும் என்பது அவனின் விருப்பம். புஞ்சிபண்டாவின் இனவாதப் போக்கைக் கண்டிக்கின்றார் இன்னொரு சிங்கள முதலாளியான ஜெயரத்ன. அவர்,

"... நமக்கு எப்படி இக்கிராமங்களில் உரிமையிருக்குதோ அப்படி அவர்களுக்கும் உரிமை இருக்கிறது.... நீ அரசியல் சேற்றில் விழுந்து விட்டாய், புஞ்சி! மனிதன் ஒவ்வொருவனுக்கும் அவன் எங்கிருந்தாலும் சுதந்திரமும் சமத்துவமும் இருக்கிறது. உயர்வு தாழ்வு என்கிறது தர்மத்திற்கு மாறானது. உண்மையான பௌத்தன் வேற்றுமை பாராட்டான்."
பொருளாதாரப் பாதிப்பு வரும்போது தான் இனவேறுபாடு தெரியுது. புஞ்சிகடைவைக்க காட்டுமாங்குளத்தில் கடையில்லை. உன்மகனுக்கு கிடைக்க வேண்டிய கிராம சேவகர் வேலை இன்னொருவனுக்குக் கிடைத்து விட்டது. இவை இரண்டையும் கொண்டு தமிழர்களே

கூடாது; துரத்த வேண்டும். அது இது என்று முடிவிற்கு வந்திட்டாய்...."[27] எனக் கூறுகின்றார்.

மதவாச்சியில் நடைபெற்ற அரசியல் கூட்டமொன்றில் பேசிய சிங்கள அரசியல் வாதியொருவர்,

"....இது எங்கள் நாடு. அபேரட்ட. இதில் வந்தேறிய மாற்றான்கள் நம்மைச் சுரண்டி வாழ்கின்றார்கள். தென்னிலங்கையில் சுருட்டுக் கடைகளையும் சிறுகடைகளையும் வைத்திருக்கும் யாழ்ப்பாணத் தமிழர்கள் எங்கள் பணத்தை வடக்கே கொண்டு செல்கிறார்கள். அவர்கள் மாடி வீடுகளில் வாழ, நாங்கள் இந்த நாட்டின் ஒரேயொரு உரிமையுள்ள இனமாக சிங்கள மக்கள் இன்னும் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றோம். ஏன் இந்த நிலை? ஸ்ரீலங்காவின் உயர் பதவிகள் எல்லாம் தமிழர்கைகளில். நாங்கள் அவர்களின் கீழ் வேலை செய்யும் பியோன்கள். இந்தநிலை மாற்றியமைக்கப்பட்டு ....."[28]

என்று இனவாதம் பேசுகின்றார். இதைக்கேட்ட ஜெயரத்ன கூடநின்ற தமிழனான செல்லத்துரைக்கு,

"புத்தா" இந்தப்பேச்சுக்களை பெரிதுபடுத்தாதை. இனவாதம் அரசியலில் ஜெயிக்க சுலபமான வழி. இனம், மதம் என்று மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டுப் பாராளுமன்றச் சீற்றுகளைக் காப்பாற்றிக் கொள்வதில் அவர்கள் எப்போதும் கவனமாக இருப்பார்கள். அடிபடுகிறது நாங்கள் தான்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இங்கே சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். வரலாறு சரிவரப்புரியவில்லை......"[29] என்று கூறுகின்றார்.

மருதங்குழிக்கிராமத்தில் வாழ்கின்ற தமிழர்களைத் தாக்குவதற்காக வந்த சிங்களக் காடையர்களை ஜெயரத்ன தடுத்துத் தமிழர்களைப் பாதுகாக்கின்றார். அவ்வேளையில் அவர்,

"புத்தன் அன்பைப் போதித்த நாட்டில் இப்படிச் சில காடையர்கள் இனவெறி கொண்டு திரிவதைக் காண வெட்கப்படுகிறேன். புத்தா! பெரும்பான்மைச் சிங்களவர்கள் இனவெறி பிடித்தவர்கள் அல்லர். தமிழில் சொல்லுவீர்களே ஒரு குடம் பாலிற்கு ஒருதுளி விசமென அப்படித்தான்..."[30] எனக் கூறுகின்றார்.

செல்லத்துரை சிங்களப்பெண்ணான சோமாவைத் திருமணம் செய்த போது ஜெயரத்ன மிகவும் மகிழ்ச்சியடைகின்றார் அவர்,

"சந்தோசம் புத்தா: இந்தக்கிராமத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கிறது, உண்மையில் எனக்குச் சந்தோசம். இதோ பார் புத்தா நீ சோமாவைக் கலியாணம் செய்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. இலங்கை முழுவதும் இப்படிப்பட்ட கலியாணங்கள் நடக்க வேண்டும், இனப்பகை அழிய இது ஓரளவு உதவும்....."[31]
என்று கூறி அவர்களை வாழ்த்துகின்றார்.

பொதுவாக இந்நாவலினூடாக, சிங்கள தமிழ் உறவுகளில் அரசியல் வாதிகளின் செயற்பாடும், பொருளாதாரப் பாதிப்புமே விரிசல்களை ஏற்படுத்தியது என்பதும் பொருளாதார நிலையில் எல்லோருக்கும் சுய திருப்தி ஏற்படும் போது இன முரண்பாடே தோன்றாது என்ற கருத்தும் எடுத்துக் கூறப்படுகின்றது. இனரீதியான முரண்பாடுகளைப் போக்க கலப்பு மணங்கள் கூட உதவலாம் என்பது செல்லத்துரை-சோமா திருமணத்தின் மூலம் உணர்த்தப்படுகின்றது.

அ.பாலமனோகரனின் நந்தாவதி[32] என்னும் நாவல் 1985 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்நாவல் வன்னிப்பிரதேசத்திலுள்ள பாரம்பரியக் கிராமமான பழையாண்டான் குளத்தினைக் களமாகக் கொண்டதாகும். இக்கிராமத்தில் தமிழ் மக்களே பாரம்பரியமாக வாழ்ந்து வந்தாலும் தொழில் நிமித்தம் சிங்கள மக்களும் இக்கிராமத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தனர். கதைப்போக்கில் நில அளவைப் பணிக்காக இக்கிராமத்தில் வந்து தங்கியிருந்த சிங்களவரான குணசேகராவின் மகள் நந்தாவதியை இக்கிராமத்து தமிழ் இளைஞனான சேனாதிராசன் காதலிக்கின்றான். இக்காதல் பின்னணியில் கூறப்படுகின்ற கதையில் ஆண்டான் குளத்துக்கு வந்த கம்யூனிஸ் கட்சி ஆதரவாளனான ஆசிரியர் கே.பி இனக்கலப்பு மணங்கள் தொடர்பான தனது கருத்தை சேனாதிராசனுக்குக் கூறும் போது,

"..... ஒவ்வொரு இனத்துக்கும் தனித்துவமான சில சிறப்பம்சங்கள் உண்டு. பனையையும் தென்னையையும்

நாம் மாங்கன்று ஒட்டுவது போல ஒட்டிவிட முடியுமா? பனை பனையாகத்தான் இருக்க முடியும். தென்னை தென்னையாகத்தான் இருக்க முடியும். அது பனைக்கும் நல்லது. தென்னைக்கும் நல்லது. சிங்களவர்களும் தமிழர்களும் மனித இனமாகிய ஒரே குடும்பம் எனும் போதும் அவரவர் தத்தம் தனித்துவம் கெடாது வாழ்ந்து சமூகத்திற்குப் பயன்தர வேண்டும்."[33]

என்று கூறுகின்றார். இது ஆசிரியர் கலப்பு மணத்தை விரும்பவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. கதையிலும் சேனாதிராசன் - நந்தாவதி காதல் நிறைவேறாமலே போய்விடுகின்றது.

தென்னிலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்ட போது சிங்களவனான குணசேகரா ஆண்டான் குளத்தில் இருப்பது தமக்குப் பாதுகாப்பில்லை என நினைத்து தென்பகுதிக்குச் செல்ல முடிவெடுக்கின்றான். குணசேகராவின் அச்சத்தைப் புரிந்து கொண்ட சிங்கராயர்,

"குணசேகரா இஞ்சைபார்! நான் மாடுவெட்டி காயத்தோட கிடக்க நீயும் உன்ரஆக்களுந்தான் என்னைத் தோளிலை சுமந்து கொண்டு போய் உயிர் தந்தனீங்கள். நந்தாவதி என்ரை புள்ளை போலை... உனக்கோ அவளுக்கோ ஏதும் ஆபத்து எங்கடை ஆக்களாலை வருமெண்டால் என்னைக் கொண்டுபோட்டு என்ரைசவத்தில மிதிச்சுத்தான் ஆரும் உன்னடிக்கு வரவேணும்... ஒரு பெட்டி தோட்டா வைச்சிருக்கிறன்.... என்ர நாலு நாயளும் காணும் நாப்பது பேரைச்

சரிக்கட்ட.... நீ ஒண்டுக்கும் பயப்படாமல் இரு.... இஞ்சை ஆண்டாங் குளத்துக்கு ஆர் வரப்போறான்...”[34]

என்று குணசேகராவுக்கு ஆறுதல் கூறி அபயமளிக்கின்றார். எனினும் குணசேகராவின் விருப்பத்தையேற்று அவர்களை மறுநாளே பாதுகாப்பாகத் தெற்கிற்கு அனுப்பி விடுகின்றார். சிங்கராயரும் இனமுரண்பாடுகளும் கலவரங்களும் ஏற்பட்டமைக்கு அரசியல் வாதிகளையே காரணமாகக் கூறுகின்றார். இவர் குணசேகராவுக்கு,

“.....எல்லாம் இந்த லெச்சன் கேக்கிறவங்கள் செய்யிறவேலை குணசேகரா!..... கிராமச்சங்கலெச்சன் வந்தால் சாதிப்புறிவு சொல்லி சனத்தைக் கிளப்பிவிடுவாங்கள்...... யாழ்ப்பாணத்தான் வன்னியான் எண்டு சண்டைபிடிப்பாங்கள். பெரிய லெச்சனிலை சிங்களவன், தமிழன் எண்டு சொல்லி சனத்தை விசராக்கி துண்டு போடப்பண்ணி வெண்டு போடுவாங்கள்..... பிறகு அவங்களெல்லாம் நல்ல சினேகிதம். இந்த பேய்ச்சனத்தை வெட்டுக்குத்திலை இறக்கி அழிஞ்சு போகுது”[35]

என்று கூறும் போது சாதி, இன, மத பேதங்களுக்கு எதிரான மனப்போக்கு வெளிப்படுகின்றது. எனவே இன முரண்பாடுகளை உருவாக்கியது வகுப்புவாத அரசியல் வாதிகளே என்ற கருத்தையே சிங்கராயரின் மூலமாக ஆசிரியர் முன்வைக்கின்றார் எனலாம்.

செங்கை ஆழியானின் ‘தீம்தரிகிடதித்தோம்’[36] என்னும் நாவல் 1988 இல் வெளிவந்தது. 1956 ஆம்

ஆண்டில் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டமூலத்தையடுத்து தமிழரசுக்கட்சியினர் கொழும்பில் நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்கள் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சிங்கள தமிழ் இனக்கலவரங்கள் முதலியவற்றைப் பின்னணியாகக் கொண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ் இளைஞனான சுரேந்திரனுக்கும் தென்னிலங்கைச் சிங்களப் பெண்ணான சோமாவுக்கும் இடையேயான காதலைக் கூறுவதாக இந்நாவலின் கதை அமைகின்றது.

சுரேந்திரனின் காதலையறிந்த அவனின் நண்பனான நாகராஜன்,

"அவள்சிங்களப் பெண்சுரேன். அவளை நீ கலியாணம் செய்து கொள்வது எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? உன் பெற்றோர் இதற்கு ஒரு போதும் சம்மதிக்கமாட்டார்கள்..."

எனக் கூறிய போது

"அவளை என்னால் பிரிந்து வாழமுடியாது. வாழ்ந்தால் அவளுடன் தான்"[37]

எனக்கூறிய சுரேந்திரனின் காதலை மனதில் சுமந்தவாறு பத்திரிகை நிருபராக பாராளுமன்றத்திற்குச் செல்கின்றான் நாகராஜன். அங்கே சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற சட்டமூலத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆசிரியர்,

"இச்சட்டத்தின் மூலம் சிங்கள மக்களையும் தமிழ் பேசும் மக்களையும் பிரித்து விடுகின்ற இனவாதக் குரல்கள் ஒலிக்கத்தொடங்கிவிட்டன. அங்கு இரண்டு இனங்களும் பிரிவினைச் சக்தியில் பிளவுறத் தொடங்க,

இங்கு இருஇன உள்ளங்கள் ஒன்றுபட முயல்கின்றன."[38] என்று எழுதுகின்றார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் நாகராஜன், "சுரேன்! காதல் என்பது எவ்வளவுக்கெவ்வளவு இனிமையானதோ அவ்வளவுக்கவ்வளவு கவலையையும் தரக்கூடியது. இனித்தான் போராட்டமே இருக்கின்றது. சொந்த மச்சாளைக் காதலித்தாலே கொதித்தெழும் யாழ்ப்பாணப் பெற்றோர், நீ ஒரு சிங்களப் பெண்ணைக் காதலிப்பதை அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சோமாவின் பக்கத்திலும் அப்படித்தான். இருஇனங்கள் கல்யாணத்தில் சங்கமிப்பதென்பது இன்று மிகச்சிரமமானது. நடந்து முடிந்து போன தேர்தல், இரு சமூகங்களிடையேயும் பெரும் பிளவைத் தோற்றுவித்துள்ளது." என்று கூறுகின்றான். ஆனால் சுரேன்,

"அரசியலையும் எங்கள் தூய்மையான காதலையும் இணைக்காதை..."[39]
என்று நாகராசனின் கருத்தை மறுக்கின்றான்.

மறுபக்கத்தில் சோமாவின் காதலை அவளின் சகோதரன் விஜயபால எதிர்க்கின்றான். சகோதரனின் எதிர்ப்பால் சோமா தமது காதல் நிறைவேறும் என்ற நம்பிக்கையை இழந்து விடுகின்றாள். அவள்,
"இனி நாங்க சந்திக்கவே முடியாது, சுரேன். இதுதான் எங்களது கடைசிச் சந்திப்போ...." எனக் கூறியபோது "அப்படிப் பேசாதே, சோமா.... எவர் எதிர்த்தாலும் சரி, நீதான் என் மனைவி...." என்று சுரேந்திரன் தனது

காதலில் உறுதியாக நிற்கிறான். ஆனால் அவள், "புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். நாம் இருவருமா உலகம்? என் பெற்றோர், உங்கள் பெற்றோர் எல்லோரையும் வெறுத்து நாம் ஒன்று சேர்ந்து வாழ்ந்து விடத்தான் முடியுமா? தெரிந்தோ தெரியாமலோ, என்அண்ணன் தமிழன் என்றதும் புண்ணில் குழம்பு பட்டது போலக் கொதிப்படைகின்றான்"
அவனுக்கு உங்களைப் பிடிக்கவில்லை. அவனோடு சேர்ந்து கொண்டு, அம்மாவும்... சுரேன், நாம் ஒன்று சேரவே முடியாது..."[40]
என்று தனது காதலுக்கு அப்பாலான குடும்ப நிலையை எடுத்துக் கூறுகின்றாள்.

தங்கை ஒருதமிழனைக் காதலிப்பதை விரும்பாதவனாகக் காட்டப்பட்ட விஜயபால, இனக்கலவரம் ஏற்பட்டுத் தமிழர்களைத் தேடித்தாக்கிய சிங்களக் காடையர்களுள் ஒருவனாக நின்று சுரேந்திரன் பயணம் செய்த பஸ்சை மறித்துத் தமிழர்களை இறக்கிய போது சுரேந்திரனை இறங்க வேண்டாம் எனக் கூறிவிடுகின்றான். இது தங்கையின் காதலன் என்ற காரணத்தால் ஏற்பட்ட மனிதாபிமானமே தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? காதலை விரும்பாத ஒருவன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுரேந்திரனைக் கொலைகூடச் செய்திருக்க முடியும். ஆனால் அவன் அவ்வாறு எதுவுமே செய்யாமல் சுரேந்திரனைக் காப்பாற்றியுள்ளான்.

தனது தங்கையின் காதலன் என்பதற்காக ஒரு தமிழனான சுரேந்திரனைக் காப்பாற்றிய விஜயபாலாவை

வேறொரு சந்தர்ப்பத்தில் யாரோ ஒரு தமிழன் கொலை செய்ததால் சோமா தமிழர்கள் மீதே வெறுப்படைகின்றாள். விஜயபாலாவும் சிங்களக் காடையர்களோடு சேர்ந்து நின்று தமிழர்களைத் தாக்கியிருக்கின்றான் எனக்கூறிய சுரேந்திரனை மறுத்துத் தனது ஆத்திரத்தை அவன்மீது வெளிப்படுத்துகின்றாள். அதுவே அவர்களின் காதல் முறிந்து போவதற்கும் காரணமாகிவிடுகின்றது.

நாவலின் முடிவு சற்றுச் செயற்கையானது போல அமைந்தாலும் இவர்கள் இணைந்து வாழமுடியாது என்பது ஆரம்பத்திலிருந்தே காட்டப்பட்டுவருவதை அவதானிக்கமுடிகின்றது. நாவலின் கதைப்போக்கின்படி மனமொத்த காதலர்களை இணையவிடாமல் தடுத்தது சிங்களம் மட்டும் என்ற சட்டமூலமும் அதனால் ஏற்பட்ட இனவிரிசல்களுமே எனத் தெரிகின்றது. எனவே இனங்களுக்கிடையேயான விரிசலை ஏற்படுத்தியது அரசியல் வாதிகளின் வகுப்புவாதத்தனமே என்பதே இந்நாவலினூடாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது.

செ.கணேசலிங்கனின் அயலவர்கள் என்னும் நாவல் 1995இல் வெளிவந்தது.[41] யாழ்ப்பாணத்தைக் களமாகக் கொண்ட இந்நாவலின் கதைப்போக்கில் யாழ்ப்பாணத்தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கும் யாழ்ப்பாணத்தில் தொழில் நிமித்தமாகத் தங்கியிருந்த சிங்களக் குடும்பம் ஒன்றுக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டுவதனூடாக இன உணர்வு புலப்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணம் கச்சேரியில்

பணியாற்றிய எக்கநாயக்கா என்ற சிங்கள அலுவலரின் குடும்பத்தினரும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்ணான சாந்தியின் குடும்பத்தினரும் யாழ்ப்பாணத்தில் அருகருகே குடியிருந்தனர். எக்கநாயக்காவின் மகன் சுமணபாலா யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் படித்து வந்தான். அவன் தமிழ் கற்பதற்குச் சாந்தி உதவியாக இருந்தாள். சாந்தியின் குடும்பத்தினரும் எக்கநாயக்காவின் குடும்பத்தினரும் மிகவும் அந்நியோந்நியமாகப் பழகிவந்தனர்.

எக்கநாயக்கா இடமாற்றம் பெற்றுத் தென்னிலங்கைக்குச் செல்கின்றார். நாட்டிலேற்பட்ட அசாதாரண நிலைமைகளால் இரு குடும்பத்தினரும் தமது தொடர்புகளைப் பேண முடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. சுமணபாலா வளர்ந்து இராணுவத்தில் இணைகின்றான்.

மறுபக்கத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் சாந்தி தனது கணவனை இழக்கின்றாள். சாந்தியின் இரண்டு தம்பிமாரும் யாழ்ப்பாணத்தில் புலிகளின் இயக்கத்தில் இணைந்து விடுகின்றனர். தங்கை சுந்தரியும் புலிகளின் இயக்கச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுவருகின்றாள்.

இத்தகைய சூழலில் இராணுவ அதிகாரியாகவுள்ள சுமணபாலா இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணத்திற்கு வருகின்றான்; வந்ததும் தமது பழைய உறவை மறக்காமல் சாந்தியின் வீட்டிற்குச் செல்கின்றான். சாந்தியின் குடும்பம் புலிகளுக்கு

ஆதரவானது என்பதைத் தெரிந்து கொண்டும் சுமணபாலா சாந்திக்கு உதவ முன்வருகின்றான். புலிப் போராளியான சாந்தியின் தம்பி சுமணபாலாவின் வருகையைக் கண்டிக்கின்றான். அவனுக்குச் சாந்தி,

“பெரும்பாலானவர்கள் நல்லவர்களே. அரசியல் வாதிகள் தான் அவர்களைக் கிளப்பிவிட்டுத் தமக்கு வேண்டிய போது கொலை, கொள்ளையடிக்கவும் அனுமதிக்கின்றார்கள். வத்தளையில் நான்கூட எனது பிள்ளைகளோடு மூன்று நாள் சிங்கள வீட்டிலேயே தங்கினது உனக்குத் தெரியாதா? எங்கோ ஒரு வெறிநாய் என்புருஷனைக் கொன்றதற்காக அந்த இனத்தையே நாங்கள் எப்படி வெறுத்து ஒதுக்க முடியும்?...... நாடு பிரிந்தாலும் சரி பிரியாவிட்டாலும் சரி என்றென்றும் நாங்கள் அவர்களின் அயலவர்களாகவே வாழ நேரிடும்”[42]

என்று கூறுகின்றாள். சாந்தியின் கருத்தை அவனும் புரிந்து கொண்டு ‘எமக்கு எதிராக ஆயுதம் ஏந்தும் வரையே அவர்கள் எமக்கு எதிரிகள்’ எனக் கூறுகின்றான். இது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே எந்தவிதமான பகைமையும் இல்லை, இனமுரண்பாடுகளை அரசியல் வாதிகளே உருவாக்கிவிட்டார்கள் என்ற ஆசிரியரின் கருத்தையே வெளிப்படுத்துகின்றது. எனவே வகுப்புவாத அரசியலைப் புறந்தள்ளினால் இரண்டு இனங்களும் பகைமையின்றி அந்நியோந்நியமாக வாழமுடியும் என்ற ஆசிரியரின் ஆதங்கம் இங்கு வெளிப்படுகின்றது.

செ. கணேசலிங்கனின் மற்றொரு நாவலான ஈனத்தொழில் என்பது 1977 இல் வெளிவந்தது.[43] இந்நாவலிலும் யாழ்ப்பாணத்துத் தமிழ் ஆசிரியரான நடராசாவுக்கும் இராணுவ அதிகாரியான ஆரியசிங்காவுக்கும் இடையிலான தனிப்பட்ட நட்புறவின் மூலமாக இன உறவு புலப்படுத்தப்படுகின்றது. இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தனது பாடசாலை ஆசிரியர்களை விடுவிப்பது தொடர்பாக இராணுவ முகாமுக்குச் சென்ற ஆசிரியர் அங்கு தனது பல்கலைக்கழக நண்பனான ஆரியசிங்காவை இராணுவ மேஜராகச் சந்திக்கின்றார். எதிர்பாராது சந்தித்த இருவரும் பழைய நட்புறவுடன் பேசுகின்றனர். நடராசாவுக்கு மேஜர் ஆரியசிங்கா,

"தமிழர்கள் கொல்லப்படும் போது சிங்களவர்கள் ஆர்ப்பரிக்கின்றனர். அதேவேளை சிங்களவர்கள் கொல்லப்படும்போது தமிழர் மகிழ்ச்சியடைகின்றனர். இது முரண்பட்ட விஷயம் மட்டுமல்ல வேதனைப்படவும் கூடிய விஷயமில்லையா"[44] என்று கூறும் போது ஆரியசிங்காவின் இனமுரண்பாடற்ற மனநிலையைப் புரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் ஆரிய சிங்கா,

"இந்த யுத்தத்தை விட்டு விட்டு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணுங்கள். தமிழர்கள் வாழும் பகுதியில் அவர்களே ஆட்சி செய்ய அதிகாரம் வழங்குங்கள். நாடு பிரியாமல் காப்பாற்றலாம் என்றெல்லாம் கூறிப்பார்த்தேன்"[45]

என்று கூறும் போது தமிழர்களின் உரிமைகளை மதித்து ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஒரு இராணுவ அதிகாரியே இருப்பதை உணரமுடிகின்றது. ஆரியசிங்காவை இவ்வாறானதொரு பாத்திரமாகச் சித்திரிப்பதன் மூலம் இராணுவத்தினர் கூட தமிழர்களுக்கு எதிரிகள் அல்ல, அவர்கள் கூலிப்படையாக நின்று விரும்பாத யுத்தமே புரிகின்றார்கள். என்பதை ஆசிரியர் உணரவைக்கின்றார். இங்கும் கணேசலிங்கன் முரண்பாட்டை உருவாக்கியவர்களாக வகுப்புவாத அரசியல் வாதிகளையே குறிப்பிடுகின்றார்.

தொகுத்து நோக்கும் போது இலங்கையில் இன, மொழி அடிப்படையிலான முரண்பாடுகளின்றி வாழ்ந்த மக்களிடையே முரண்பாடுகளை உருவாக்கியவர்கள் வகுப்புவாத அரசியல் வாதிகளே என்பதும் பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைக்கக்கூடிய ஒரு வாழ்க்கை அமையும் போது இம்முரண்பாடுகள் மறைந்து போய்விடும் என்பதும் இந்நாவல்களினூடாக உணர்த்தப்படுகின்றது. மேலும் அரசியல் வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட பகைமை உணர்வினையும் இன, மொழி ரீதியான முரண்பாடுகளையும் புறந்தள்ளி சம உரிமையும் அந்தஸ்தும் உள்ளவர்களாக இணைந்து வாழ இம்மக்கள் என்றும் தயாராகவே இருக்கின்றார்கள் என்பதும் எமக்கு உணர்த்தப்படுகின்றது. எனவே வகுப்பு வாத அரசியல் வாதிகள் தமது சுயநலப்போக்கினை

விடுத்து தேசத்தின் நலனில் அக்கறை செலுத்த முற்பட்டால் சிவபூமியாக இருந்த இலங்கையில் போதிமாதவன் போதித்த அன்பும், அறமும் அர்த்தமுடையனவாகி மீண்டும் இங்கே வசந்தம் துளிர்க்கும்.

**அடிக்குறிப்புக்கள்**

1. தளையசிங்கம்,மு., - (1984) ஒரு தனிவீடு, சமுதாயம் பிரசுராலயம், கோவை.
2. மேலது, ப . 189.
3. மேலது, ப . 214.
4. இளங்கீரன் - (1962)நீதியே நீகேள், பாரிநிலையம்,சென்னை.
5. மேலது, ப . 405.
6. மேலது, ப . 420.
7. மேலது, ப . 421.
8. மேலது, ப . 409.
9. மேலது, ப . 409.
10. மேலது, ப . 409.
11. சாந்தன் - (1978) ஒட்டுமா, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.
12. மேலது, ப . 14.
13. மேலது, ப . 43.
14. மேலது, ப . 57.
15. மேலது, ப . 71.
16. மேலது, ப . 75.

17. அருள் சுப்பிரமணியம்,க.,- (1973)அவர்களுக்கு வயது வந்துவிட்டது, மலர் வெளியீடு, கொழும்பு.
18. மேலது, முன்னுரை
19. மேலது, ப . 31.
20. மேலது, ப . 57.
21. மேலது, ப . 58.
22. மேலது, ப . 66.
23. மேலது, ப . 124.
24. ஞானரதன் - (1977) புதியபூமி, வீரகேசரி வெளியீடு, கொழும்பு.
25. மேலது, ப . 158.
26. செங்கை ஆழியான் - (1991,) ஒருமைய வட்டங்கள், இரண்டாம் பதிப்பு கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
27. மேலது, ப . 17.
28. மேலது, ப . 64.
29. மேலது, ப . 64-65.
30. மேலது, ப . 75.
31. மேலது, ப . 59.
32. பாலமனோகரன்,அ., - (1985) நந்தாவதி, சோமுபுத்தகநிலையம், மதுரை.

33. மேலது, ப . 113.
34. மேலது, ப . 137.
35. மேலது, ப . 139.
36. செங்கை ஆழியான், - (1988) தீம்தரிகிடதித்தோம், யாழ்ப்பாணம்.
37. மேலது, ப . 6.
38. மேலது, ப . 6-7.
39. மேலது, ப . 16.
40. மேலது, ப . 33.
41. கணேசலிங்கன்,செ., - (1995) அயலவர்கள், குமரன் பதிப்பகம் சென்னை – கொழும்பு.
42. மேலது, ப.58-59
43. கணேசலிங்கன்,செ., - (1997) ஈனத்தொழில், பாரிநிலையம், சென்னை.
44. மேலது, ப . 141.
45. மேலது, ப . 144.

## 2. ஈழத்துத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் மனித உரிமை மீறல்கள்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் தான்பிறந்த உலகத்தில் சுதந்திரமாகவும் கண்ணியத்தோடும் வாழ்கின்ற உரிமை உள்ளது; இதுவே மனித உரிமை. நிறம், மதம், பால் வேறுபாடுகள் காரணமாக தனிமனிதனுடைய சுதந்திரமும் கண்ணியமும் பாதிக்கப்பட்டாலோ அல்லது பறிக்கப்பட்டாலோ அது மனித உரிமைப் பறிப்பேயாகும். ஒரு சமுதாயத்தின் உயர்வும் தாழ்வும் அதன்பண்பாட்டின் அடிப்படையிலே தங்கியுள்ளது. பண்பாட்டின் ஆணிவேராக உள்ளது. மனிதநேயம்; இம்மனிதநேயம் மனிதஉரிமைகளைப் பாதுகாக்கும் போதே உருவாகின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

(புறநானூறு 192)

என்ற சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனாரின் வார்த்தைகளிலும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

(குறள் 972)

என்ற வள்ளுவரின் பிரகடனத்திலும் பண்டைத் தமிழர்களின் மனிதநேயத்தை, மனித உரிமைகளை மதிக்கின்ற மாண்பைக் காண்கின்றோம். இதுவே தமிழர் பண்பாட்டை உயர்வானதாக உலகம் ஏற்றுக்கொள்ளவும் வழிவகுத்தது. தமிழர் பண்பாட்டின்

உயர்வை உலகுக்கு எடுத்துக்காட்டிய திருக்குறள் உலகப் பொதுமறையாகப் பேசப்பட்டபோது தமிழர்களுக்கு அது பெருமையாக இருந்தது. ஆனால் அதே தமிழ் மண்ணில் ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலுமே நாளாந்த வாழ்க்கையாகி மனிதாபிமானம் மரணித்துப்போன போது தமிழர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிற்று.

உலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் நிறத்தால், மொழியால், மதத்தால், இனத்தால் ஒன்றுபட்டவர்களாக இருக்க முடியாது; ஏன் பொருளாதார பலத்தால் கூட இவர்கள் அனைவரும் ஒத்தவர்களாக இருக்க முடியாது. ஒவ்வொருஇன மக்களிடையேயும் சாதி, மத வேறுபாடுகள் நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன. எந்த ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுடைய உரிமையைப் பறிக்கின்ற அதிகாரம் எவராலும் வழங்கப்படவில்லை. ஆனால் மனிதர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அவர்கள் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் இழந்து அடிமைகளாக வாழ்கின்றனர். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்ற குரல் இன்றைய உலகில் உரத்த குரலாக ஓங்கி ஒலிக்கின்றது.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியிலும் நீண்டகாலமாக மனித உரிமைப் பறிப்பு நிகழ்ந்து கொண்டே வருகின்றது. இவர்கள் தமக்குள்ளேயே சாதியின் பெயராலும் மதத்தின்

பெயராலும் பண்பாட்டின் பெயராலும் அதிகாரத்தாலும் ஒருவரின் உரிமையை இன்னொருவர் பறித்துக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலை அனைவரதும் மனித உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. இது நாட்டில் ஏற்பட்ட அரசியல் ரீதியான குழப்பங்களாலும் இன, மொழி ரீதியிலான முரண்பாடுகளாலும் நிகழ்ந்த அவலங்கள் என்பதால் அரசியல் அடிப்படையில் ஏற்படுகின்ற அமைதித் தீர்வொன்று இதற்கு முற்றுப்புள்ளியாகலாம். ஆனால் தமிழ் மக்களிடையே தமக்குள் தாம் முரண்பட்டு ஒருவரின் உரிமையை மற்றொருவர் பறிக்கும் நிலைக்கு எது தீர்வாக முடியும் என்பது வினாவாகவேயுள்ளது. அதனால் அத்தகைய உரிமை மீறல்களை எடுத்துக் காட்டுவதே பயனுடையதாக அமையும் எனக்கருதி ஈழத்துத் தமிழ் நாவல்களினூடாக இவை தேடப்படுகின்றன.

## சாதியின் பெயரால்

தமிழர் சமுதாயத்தில் சாதியின் பெயரால் ஒருபகுதித் தமிழர்கள் இன்னொரு பகுதித் தமிழர்களை அடிமைகள் போல நடாத்தி வந்திருக்கின்றனர். சாதாரண மனித உரிமைகளே இம்மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன. கல்வி கற்கும் உரிமை கூட மறுக்கப்பட்டதால் தமது உரிமைகள் பறிக்கப்படுவதை இவர்களால் உணரமுடியாதிருந்தது. உணர்ந்தவர்களும் ஒருவேளை உணவுக்கே கதியற்ற நிலையில் இருந்ததால் உரிமைக்காகக் குரல் கொடுக்க

முடியாதிருந்தது. 1940 களின் பின்னர் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி இம்மக்களின் வாழ்விலும் சிறிது மாற்றத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது. மக்கள் தமது உரிமைக்காகப் போராட முற்பட்டார்கள். போராட்டம் அரசியல் ரீதியாக இவர்களுக்கு வெற்றியளித்தாலும் சமூக ரீதியாக அவர்களின் உரிமைகள் தொடர்ந்தும் பறிக்கப்பட்டே வருகின்றன. சட்டத்தினால் உரிமைகள் வழங்கப்பட்டாலும் சமூகத்தின் மனக்கதவுகள் அகலத்திறக்கப்படும் போதே அவை அர்த்த முடையனவாக மாறும் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

## வழிபாட்டுரிமை மறுப்பு.

செ.கணேசலிங்கனின் நீண்ட பயணம்[1] என்னும் நாவலில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள ஒரு பகுதி மக்களுக்கு ஆலய வழிபாட்டில் சம உரிமை மறுக்கப்பட்டது எடுத்துக்காட்டப்படுகின்றது. கதையில் குரும்பையூர் அம்மன் கோயிலில் நடைபெற்ற திருவிழாவில் பஞ்சமர்களுக்கு சுதந்திரமானதும் சமத்துவமானதுமான வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு அவர்கள் கயிறு கட்டிப் பிரித்தொதுக்கப்பட்ட பகுதிக்குள் நிற்குமாறு வற்புறுத்தப்படுவது காட்டப்படுகின்றது. பிரித்தொதுக்கப்பட்ட பகுதிக்குள் இருந்த நல்லான் என்ற பள்ளர் குலச்சிறுவன் நித்திரையில் தடுமாறி கயிற்றுக்கு அப்பால் புரண்டபோது வேளாள இளைஞர்கள் அவனை மோசமாக அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த நல்லானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதையும் வேளாள இளைஞர்கள் தடுக்கின்றனர். அதனால் அவன் இறக்க நேரிடுவதாக ஆசிரியர் சித்திரிக்கின்றார்.

திருவிழாவின் போது வெளிவீதி உலா வந்த அம்மனுக்கு நிறைகுடம் வைத்து நிறைகுடத் தண்ணீரை ஊற்றிய பள்ளர் குலத்தவனான செல்லப்பன் வேளாள இளைஞர்களால் தாக்கப்படுகின்றான். இவை சாதியின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களே.

டானியலின் பஞ்சமர் [2] என்னும் நாவலில் நந்தாவில் கந்தசுவாமி கோயிலில் பஞ்சமர்களுக்குச் சமத்துவமான வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டது எடுத்துக்காட்டப்படுகின்றது. பஞ்சமர்கள் வன்முறை வழியில் கதவுகளை உடைத்தும் தேரை எரித்தும் கோயிலினுள் நுழைந்ததாக ஆசிரியர் சித்திரிக்கின்றார்.

இவரது அடிமைகள் [3] என்னும் நாவலில் மட்டுவில் பன்றித் தலைச்சிஅம்மன் கோயிலில் பஞ்சமர்களுக்கு வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டதும் அவர்கள் வன்முறையுடன் கூடிய போராட்டத்தை மேற்கொண்டதும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

அகஸ்தியரின் எரிநெருப்பில் இடைபாதை இல்லை [4] என்னும் நாவலில் சங்கானையில்

பஞ்சமர்களுக்கு வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டது எடுத்துக்காட்டப்படுகின்றது.

டானியலின் கானல்[5] என்னும் நாவலில் யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவத் தேவாலயம் ஒன்றில் பஞ்சமர்களுக்கு சமத்துவமான வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டது எடுத்துக் காட்டப்படுகின்றது. சைவசமயத்தில் மறுக்கப்பட்ட வழிபாட்டுரிமைகளைக் கிறிஸ்தவ மதத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் மதம் மாறியவர்கள் கிறிஸ்தவத் தேவாலயத்திலும் சமத்துவமான வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு ஏமாற்றமடைகின்றனர். கதையில் உயர்சாதிக்காரனாக இருந்தாலும் மனித உரிமைகளை மதிக்கும் பாத்திரமாகக் காட்டப்படும் பூக்கண்டர் கிறிஸ்தவத் தேவாலயத்தில் பஞ்சமர் வகுப்புப் பெண்கள் துப்பட்டி போடவிடாமல் தடுக்கப்பட்டதைக் கண்டு ஆத்திரப்படுகின்றார். அவர்,
“என்ரை மருமோன்ரை கர்த்தர் கோயில் பூசைக்கு போனனான், அங்கை ஒருத்தியும் துப்பட்டி போடாமல் சீலையாலை தான் தலையை மூடிக் கொண்டு வந்ததை நான் பார்த்தனான். ஏனெண்டு விசாரிச்சுப் பாத்தன் உந்த எளிய சாதியள் வேதக்காறராயிருந்தாலும் நாங்கள் அவையை உதுகள் செய்ய விடுகிறேல்லை... எண்டாங்கள்... நான் தெரியாமல் தான் கேக்கிறன், காளிகோயிலிலை உங்கடை ஆக்கள் வெளியாலை நிண்டு கும்பிட்டதுக்கம், கயித்துக்கங்காலை நிண்டு கும்பிடுகிறதுக்கும் என்ன வித்தியாசம்.... மிச்சம் கெதியிலை இஞ்சையும் உப்பிடியெல்லாம்

செய்வாங்கள். உதை ஞானமுத்துக்குருவானவராலும் நிப்பாட்ட ஏலாது. அவர் வேதத்தை வளர்க்க வந்தவர் ஒருமாதிரிக் கண்டும் காணாமலும் விட்டிடுவார்."[6]
என்று கூறுகின்றார். அவர் கூறியதுபோலவே வெஸ்பர் நோவினையின் போது குருவானவர் பஞ்சமர்களான கிறிஸ்தவர்களை ஏனையவர்களோடு சேராமல் தனியே அமருமாறு கூறுகின்றார். இது பஞ்சமர்களின் சுதந்திரமானதும் சமத்துவமானதுமான வழிபாட்டுரிமையை மறுக்கும் செயலாகவும் அவர்களின் கண்ணியத்திற்கு ஏற்படுத்தப்படும் இழுக்காகவும் அமைகின்றது. பஞ்சமர்கள் இதற்காக ஆத்திரப்பட்டாலும் அவர்களின் பசித்த வயிறுகள் இதற்காகப் போராட முடியாமல் பணிந்து போய் விடுவதாக ஆசிரியர் சித்திரிக்கின்றார்.

செ.கணேசலிங்கனின் நீண்ட பயணம் என்னும் நாவலிலும் சைவசமயத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறியவர்கள் அங்கு வேதக்காரப் பள்ளர்கள் என்ற தனிச்சாதியாகக் கணிக்கப்பட்டு வழிபாட்டில் சமஉரிமை மறுக்கப்பட்டது எடுத்துக் காட்டப்படுகின்றது.

## பாடசாலைகளில் உரிமை மறுப்பு

யாழ்ப்பாணத்தில் மிஷனரிகளின் வருகைக்கு முன்னர் பாரம்பரியக் கல்வி முறையே இருந்து வந்தது. மரபுரீதியான இக்கல்வி முறையில் பஞ்சமர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மிஷனரிகளின் வருகையுடனேயே கல்வி சனநாயகப்படுத்தப்பட்டது.

எனினும் பாடசாலைக்குச் சென்ற பஞ்சமர் குலத்து மாணவர்கள் அங்கு பல்வேறு வழிகளிலும் சமத்துவமான உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே இருந்து வந்தனர். செ.கணேசலிங்கனின் போர்க்கோலம்[7] என்னும் நாவலில் மிஷன் பாடசாலையில் பஞ்சமர் குலத்து மாணவர்களுக்கு வகுப்பிலும் பிரார்த்தனை மண்டபத்திலும் சம உரிமை மறுக்கப்பட்டுத் தனியான இடம் ஒதுக்கப்பட்டமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்நாவலில் வருகின்ற நவமணி வாத்தியார்,

“பள்ளிக்கு என்னடி படிப்பு? போய் செம்பாட்டில ஆடு மாட்டை மேயன்” [8]

என்று அன்னம் என்ற பள்ளர்குலச் சிறுமியையும் வேறுமாணவர்களையும் தினமும் ஏசுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது சாதியின் பெயரால் அம்மாணவர்களின் கல்வி உரிமையை மறுக்கின்ற செயலே.

அகஸ்தியரின் எரிநெருப்பில் இடைபாதை இல்லை என்னும் நாவலில் பஞ்சமர்குலச் சிறுவர்களுக்கு பாடசாலையில் சம ஆசனம் வழங்கப்படாததும் பாடசாலைக் கிணற்றில் தண்ணீர் அள்ளும் உரிமை மறுக்கப்பட்டதும் எடுத்துக்காட்டப்படுகின்றது. தெணியானின் விடிவை நோக்கி [9] என்னும் நாவலிலும் பஞ்சமர் குலத்து மாணவர்களுக்கு பாடசாலைக் கிணற்றில் தண்ணீா அள்ளும் உரிமை மறுக்கப்பட்டது எடுத்துக் காட்டப்படுகின்றது. இது அம்மாணவர்களின்

கண்ணியமான மனித உரிமையைப் பறிக்கும் செயற்பாடே.

பஞ்சமர்களுக்கு நல்ல ஆடையினையோ நகையினையோ செருப்பினையோ அணிவதற்கான உரிமைகூட மறுக்கப்பட்டிருந்தது என்பதை அகஸ்தியரின் எரிநெருப்பில் இடைபாதை இல்லை என்னும் நாவல் எடுத்துக்காட்டுகின்றது. நெல்லியடிச் சந்தியில் வெள்ளைவேட்டி, பட்டுச்சால்வை, கலாவரை மோதிரம், காலில் செருப்பு, நெற்றியில் சந்தனப்பொட்டு, இடதுகைமணிக்கட்டில் கடிகாரம் சகிதம் நின்ற செல்லையா என்ற பஞ்சமர் குலத்தவனை உயர்சாதி இளைஞர்கள் தாக்குவதுடன் அவனின் நடுமுதுகில் நளச்செல்லன் என்று எழுதிவிடுவதாகவும் அகஸ்தியர் எடுத்துக் காடடுகின்றார். [10]

டானியலின் அடிமைகள் என்னும் நாவலில் சேவலடிப் பந்தயத்திற்காக வந்த பஞ்சமர் குலத்தவனான பண்டாரியனின் கிறில்வெட்டுத்தலை, காதில் கல்லுப்பதித்த காதுக்குச்சி, அரைக்கை பெனியன், முழங்காலுக்குக் கீழாக பதித்து உடுத்த வேட்டி, ஒட்டுமீசை ஆகியவற்றுடன் கூடிய தோற்றம் உயர் சாதி இளைஞர்களுக்கு வெறுப்பைக் கொடுப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.[11] இவை சாதியின் பெயரால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களே.

பஞ்சமர்குலத்து மக்களுக்குத் தமது பிள்ளைகளுக்குத் தாம் விரும்பிய பெயர்களை

வைக்கின்ற உரிமையும் மறுக்கப்பட்டது. இவர்கள் பிறப்புப் பதியும் அதிகாரிகளிடம் சென்று பிள்ளைகளின் பெயர்களைக் கூறும் போது அதிகாரிகள் தமது மனம் விரும்பியவாறு பெயர்களை விகாரப்படுத்தியே பதிவு செய்தனர். இதனால் முருகேசு முருகன் ஆகவும், கந்தசாமி கந்தன் ஆகவும், செல்லம்மா செல்லியாகவும், பார்வதி பாறியாகவும் விகாரப்படுத்தப்பட்டன. அகஸ்தியர், செ.கணேசலிங்கன் ஆகியோரின் நாவல்களில் இவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[12]

பஞ்சமர்களைத் தீண்டத்தகாதவர்களாகக் கருதிய உயர்சாதியினர் அவர்களைக் காண்பதால் தமக்குத் தீட்டு உண்டாகிவிடும் எனக் கருதினர்; இதனால் அவர்களுக்கு வீதிகளில் சுதந்திரமாக நடமாடுகின்ற உரிமை மறுக்கப்பட்டது. பஞ்சமர்கள் வீதிக்கு வரும்போது தமது வருகையை அறிவிக்கும் பொருட்டு காவோலையை இழுத்து வரவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர். காவோலையின் ஓசையைக் கேட்டதும் உயர் சாதியினர் மறைந்து நின்று தீட்டுப்படாமல் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதே இதன் நோக்கமாகும். இந்த வழக்கத்தை டானியல் அடிமைகள் என்னும் நாவலில் எடுத்துக்காட்டியுள்ளார். இங்கு மழுவராயரின் மனைவிக்கு மாந்திரீகம் செய்வதற்காக அழைக்கப்பட்ட கயித்தான் என்ற துரும்பனைக் காவோலையை இழுத்து வருமாறு நிர்ப்பந்திக்கின்றனர். என்றும் அவன் அதற்கு உடன்பட மறுத்துவிட்டான் என்றும் டானியல் எடுத்துக்காட்டியுள்ளார்.[13]

தொழிலாளர்கள் மீதான உரிமைப் பறிப்பு.

இலங்கைத் தமிழர் சமுதாயத்தில் அதிகமாக மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக வாழ்பவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் பெருந்தோட்டங்களில் பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட கூலித்தொழிலாளர்களும் அவர்களது சந்ததியினரும் இன்று மலையகமெங்கும் பரந்து வாழ்கின்றனர். மலையகத் தமிழர்கள் என்று தனித்துப் பேசக்கூடிய வகையில் இவர்கள் இன்று வளர்ச்சியடைந்துள்ளனர். கல்வி வாய்ப்புக்களினால் இன்று இவர்களின் சமூக நிலை உயர்வடைந்திருப்பினும் இவர்கள் ஆங்கில ஆட்சிக்காலத்திலிருந்தே மனித உரிமை மீறல்களை அதிகமாக அனுபவித்து வந்துள்ளனர்.

இந்தியாவில் அனுபவித்த வறுமையிலிருந்து விடுபடலாம் என்ற எதிர்பார்ப்பில் மலையகத்திற்கு வந்த தொழிலாளர்களுக்கு இங்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்களின் உழைப்பைச் சுரண்டி வாழ்ந்தனர். காலப்போக்கில் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டபோது அவர்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முற்பட்டனர். பெனடிக்ற் பாலனின்

சொந்தக்காரன் என்னும் நாவலில் வருகின்ற இராகவன் என்னும் தொழிலாளவர்க்கப் பாத்திரம்,

“நாம் நேர்மையாகத்தான் உழைக்கிறோம். நமக்குத்தான் இலங்கையில் ஆகக்குறைந்த கூலி, படுத்துத்தூங்க நல்லவீடு இல்லை. மனிதனுக்கு இருக்கக்கூடிய அடிப்படை உரிமைகளே இல்லை.”[14]
என்று தமது உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராகக் குரல் எழுப்புவதைக் காணமுடிகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வசிப்பதற்கு வசதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. லயங்கள் என அழைக்கப்படும் சிறிய குடிசைகளிலேயே பலர் நெருக்கமாகக் குடியமர்த்தப்பட்டனர். இந்த லயங்களில் மிருகங்களைப் போல அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படவில்லை. பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் என்னும் நாவலில்,
“அந்த லயத்தில் வாழும் எல்லோருக்குமாக லயத்தின் சிறிதுதூரத்தில் கட்டப்பட்ட ஒரே கக்கூஸ், மலசலத்தின் அறிவியல் நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. அந்த லயத்திற்கு மட்டுமன்றி இல்லை எல்லா லயத்திற்கும் அப்படித்தான்.”[15]
என்று கூறும் போது தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை வாழ்வுரிமையை வழங்காத தோட்ட அதிகாரிகளின் செயற்பாட்டைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறான லயங்களில் ஆடு மாடுகளைப் போல் அடைத்து வைக்கப்படுவதால் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் மிகவும் அதிகம். பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் என்னும் நாவலில் திருமணமாகி ஒருமாதமாகியும் தனது மனைவியுடன் உறவு வைத்துக்கொள்ள முடியாமல் தவிக்கும் சப்பாணியின் துயரம் எடுத்துக்காட்டப்படுகின்றது.[16] கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை என்னும் நாவலில் புதிதாகத் திருமணம் முடித்த வள்ளியும் செங்கமலையும் ஒருவரோடுஒருவர் தனியாகப் பேசக்கூட வாய்ப்பில்லாமல் தவிக்கும் நிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.[17]

மனிதர்கள் அனைவருக்கும் இருக்கும் கல்வி கற்கும் உரிமை கூட மலையக மக்களுக்கு வழங்கப்படவில்லை. மலையக மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்கு வசதியான பாடசாலைகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. தோட்டத்தில் இருந்த சிறிய பாடசாலையையும் மூடிவிட்டு அந்தக் கொட்டிலைத் தோட்ட டிஸ்பென்சருக்கும், கண்டக்டருக்கும் மாட்டுத் தொழுவமாக உபயோகிக்க யோசித்த தோட்ட நிர்வாகத்தின் மனித உரிமை மீறலை நந்தியின் மலைக்கொழுந்து என்ற நாவல் எடுத்துக்காட்டுகின்றது.[18]

கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை என்ற நாவலில் வருகின்ற வள்ளி தனது காதோலையை விற்றுத் தனது பிள்ளைகளை நாட்டுப்பக்கத்திலுள்ள பாடசாலைக்கு அனுப்புகின்றாள். தோட்டத்தில்

வசதியான பாடசாலை அமைக்கப்படாததாலேயே இத்தகைய துன்பத்தை இவர்கள் அனுபவிக்க நேரிட்டது. இந்நிலையால் கல்வி வாய்ப்பை இழந்தவர்களே அதிகம்.

மலையக மக்களுக்கு அமைப்பு ரீதியாக ஒன்று பட்டு இணையும் உரிமையும் மறுக்கப்பட்டது. தூரத்துப்பச்சை என்னும் நாவலில் வருகின்ற லட்சுமணன் தொழிற்சங்கத்திற்கு ஆள் சேர்த்ததால் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றான்.[19] சி.வி.வேலுப்பிள்ளையின் வீடற்றவன் என்னும் நாவலில் வருகின்ற ராமலிங்கம் தொழிற்சங்கத்திற்கு ஆள் சேர்த்ததால் தோட்டத்தைவிட்டே விரட்டப்படுகின்றான்.[20] இது மனித உரிமை மீறல் எனினும் அம்மக்களால் இதனை அப்போது எதிர்க்க முடியாமலே இருந்தது.

தோட்டத்தொழிலாளப் பெண்கள் பாலியல் ரீதியாகவும் உரிமை மீறல்களை அனுபவித்தனர். தூரத்துப் பச்சை என்னும் நாவலில் வருகின்ற முத்தம்மாவை கணக்குப்பிள்ளை தனது பாலியல் தேவைக்குப் பயன்படுத்துகின்றான்.[21] இந்நாவலில் வருகின்ற மற்றொரு பெண்ணான சிவகாமி வெள்ளைக்காரத்துரையின் பாலியல் தேவைகளுக்கு பலியாகின்றாள்.[22] பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் என்னும் நாவலில் வருகின்ற ஆத்தாள்,[23] தெளிவத்தை ஜோசெப்பின் காலங்கள் சாவதில்லை என்னும் நாவலில் வருகின்ற அலமேலு,[24] கே.ஆர்,டேவிட்டின் வரலாறு அவளைத் தோற்றுவிட்டது என்னும் நாவலில் வருகின்ற முனியம்மா[25] போன்ற பலர் தோட்ட அதிகாரிகளால் பாலியல் ரீதியாகச் சுரண்டப்பட்டனர். மலையகத்தில்

இவ்வாறான உரிமை மீறல் மிகவும் சாதாரணமாகவே நடைபெற்று வந்ததை மலையக நாவல்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**பண்பாட்டின் பெயரால் நிகழும் உரிமை மீறல்கள்.**

தமிழர் சமுதாயத்தில் குடும்பம் மிகவும் முக்கியமானதொரு அமைப்பாகக் கருதப்படுகின்றது. திருமணத்தின் மூலம் ஒரு ஆணுடன் இணைந்து குடும்பத்தவளாகி அதாவது இல்லாளாகி வாழும் வாழ்வே பெண்ணுக்குச் சிறப்பானதெனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர். ஆனால் குடும்ப அமைப்பு ஆணாதிக்கத்தை மையப்படுத்தியே உருவாக்கப் பட்டதால் அதில் பெண்ணின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்ற குரல் அண்மைக்காலங்களில் உரத்து ஒலிக்க ஆரம்பித்துள்ளது.

தமிழர் சமுதாயத்தில் இருக்கின்ற சீதன வழக்கத்தால் பெண்கள் தாம் விரும்பிய ஆணைத் திருமணம் செய்ய முடியாதுபோய்விடுகின்றது. பலர் திருமண வாய்ப்பை இழந்து விடுகின்றனர். பலருக்கு விருப்பத்திற்கு மாறான திருமணங்கள் நடைபெறுகின்றன. இங்கெல்லாம் பெண்களின் தனிமனித உரிமைகள் மறுக்கப்பட்டு பண்பாட்டின் பெயரால் அவர்களது வாழ்க்கை பலியிடப்படுகின்றது.

செங்கை ஆழியானின் காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்[26] என்னும் நாவலில் வருகின்ற மனோரஞ்சிதம் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில்

ரவீந்திரனைக் காதலிக்கின்றாள். படிப்பு முடிந்து அவள் உழைக்க ஆரம்பித்த போது அவளை ரவீந்திரனுக்குத் திருமணம் செய்து வைக்க அவளின் பெற்றோர் விரும்பவில்லை. அவளின் உழைப்பு அவர்களுக்குத் தேவைப்படுவதால் அவளின் வாழ்வுரிமை மறுக்கப்படுகின்றது. குடும்ப அமைப்பில் கட்டுண்டதால் அவளும் தனது உரிமையைப் பலிகொடுத்து வாழ்வை இழக்கின்றாள்.

செ.கணேசலிங்கனின் சடங்கு[27] என்னும் நாவலில் வருகின்ற பத்மாவின் வாழ்வுரிமை சாதியின் பெயரால் மறுக்கப்படுகின்றது. பத்மா தன்னிலும் சாதி குறைந்தவனான இராசரத்தினத்தைக் காதலிக்கின்றாள். சாதியபிமானத்தால் பத்மாவின் தந்தை இக்காதலை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். பத்மாவின் விருப்பத்திற்கு மாறாக வேறொரு திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. விரும்பாத வாழ்வில் துன்பங்களை அனுபவித்த பத்மா தற்கொலை செய்து வாழ்வை முடித்துக் கொள்கின்றாள்.

அ.பாலமனோகரனின் கனவுகள் கலைந்தபோது[28] என்னும் நாவலில் வருகின்ற வசந்தி, பாலியல் ரீதியாகக் குறைபாடுள்ள ராமச்சந்திரனைத் திருமணம் செய்கின்றாள். அவன் தனது பலவீனத்தை மறைத்துக் கொள்வதற்காக அவளோடு இணைந்து வாழ்வதைத் தவிர்த்துக் கொள்கின்றான். திருமணமாகியும் கணவனோடு பாலியல் இன்பத்தை அனுபவிக்க முடியாமல் போன வசந்தி தனது நிலையை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறி பொருத்தமற்ற வாழ்விலிருந்து விலகிக்கொள்ள முடியாமல்

தவிக்கிறாள். அவளின் வாழ்வு குடும்பம் பண்பாடு என்பவற்றின் பெயரால் பலியிடப்படுகின்றது.

செங்கை ஆழியானின் கிடுகுவேலி[29] என்னும் நாவலில் வருகின்ற நிர்மலா குடும்பம் என்ற ஆணாதிக்க அமைப்பால் கட்டுண்டு தனது வாழும் உரிமையை இழக்கின்றாள். திருமணம் செய்து மூன்றே மாதத்தில் நிர்மலாவின் கணவன் அவளைப் பிரிந்து வெளிநாட்டிற்கு உழைக்கச் செல்கின்றான். தனது சகோதரிகளின் சீதனப்பணத்திற்காக உழைக்கச் செல்லும் கணவன், தனது வாழ்வைப் பொருட்படுத்த வில்லையே என்ற மனக்குமுறலை நிர்மலாவிடம் கேட்க முடிகின்றது. அவள்.

"எல்லோரும் கலியாணம் செய்யிறது வாழ்கிறதுக்கு, உழைக்கிறதுக்கில்லை. நாங்க சந்தோசமாய் வாழவேண்டிய வயதில உழைக்க வேண்டும் என்கிறியள் கலியாணம் கட்டி மூன்று மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் பிரிகிறன் என்கிறியள்"[30]

என்று கூறும் போது அவளின் பிரிவுத்துயரம் மட்டுமன்றி அவளின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டதும் புலப்படுத்தப்படுகின்றது. ஆணாதிக்கத்தால் கட்டுண்ட குடும்ப அமைப்பு அவளைக் கட்டுப்படுத்தி அவளின் உரிமையைப் பறித்திருக்கின்றது.

இத்தகையதொரு நிலையிலேயே பெண்கள் குடும்ப அமைப்பை வெறுக்கும் நிலையும் உருவாகியது. இத்தகைய நிலையை செ.கணேசலிங்கனின் பிற்கால நாவல்கள் சில தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை[31] என்னும் நாவலில் வருகின்ற சித்திரா, "ஒருவனுக்குச் சமைத்துப் போட்டு

பிள்ளைபெற்றுக் கொடுத்து அடிமைப்பணிகளும் செய்ய நான் தயாரில்லை”[32]

எனக்கூறும் போது அவள் திருமணம், குடும்பம் ஆகியவற்றை அடிமைச் சின்னங்களாகக் கருதி வெறுக்கும் நிலை புலப்படுகின்றது.

குடும்பச்சிறையில் [33] என்ற நாவலில் வருகின்ற சுகன்யா, குமுதினி ஆகிய பெண்கள் குடும்ப அமைப்பில் கட்டுப்படாது சுதந்திரமான பாலுறவில் ஈடுபடுவதை விரும்பி நிற்கின்றனர். உலகெங்கும் உரத்து ஒலிக்கின்ற பெண்ணியத்தின் குரல் இதனைப் பெண்களின் உரிமை எனக் கூறினாலும் தமிழர் பண்பாடு இந்த உரிமையைப் பெண்களுக்கு வழங்க இன்னும் தயாராகவில்லை என்றே கூறலாம்.

அடுத்து, தமிழர் பண்பாட்டில் கணவனை இழந்த பெண்ணுக்கு மறுவாழ்வு வாழும் உரிமை வழங்கப்படுவதில்லை. சட்டம் இதற்குத் தடையாக இல்லா விட்டாலும் சமூகம் இதனை மனம்விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் அண்மைக் காலங்களில் பெண்களுக்கு இந்த உரிமை வழங்கப்படவேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கின்றது. மணிவாணனின் யுகசந்தி [34] என்னும் நாவலில் வருகின்ற இளம்விதவையான இலட்சுமிக்கு மறுவாழ்வு கொடுக்க சிவபாதம் என்ற இளைஞன் முன்வருகின்றான். ஆனால் சமூகம் அவளுக்கு இந்த உரிமையை வழங்க முன்வருமா என்ற நிலையில் இலட்சுமியின் தமக்கை பார்வதி சமூகத்தின் கருத்தை மறுதலித்து அவளுக்கு வாழ்வுரிமை வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றாள். அவள்,

"அவள் குழந்தை வாழ்ந்து அலுத்துப் போகவில்லை, கொடூரமான முறையில் அவளது வாழ்க்கை தட்டிப் பறிக்கப்பட்டது. அதற்கு நாம் எங்கள் சம்பிரதாயங்களைக் காட்டி அவளைக் குற்றப்படுத்துவது நியாயமாகாது. ஒரு விதவை தன் மனம் ஒப்பி எந்தவித வாழ்க்கையை நாடுகின்றாளோ அந்தவித வாழ்க்கையை அவளுக்குக் கொடுப்பதற்கு நாம் தடையாக இருக்கக்கூடாது. அப்படித் தடைவிதிப்பது அவளைத் தவறான வேறுவழிகளில் ஈடுபடுத்துவதாக அமைந்துவிடும்."[35]

எனக்கூறி விதவைகளின் வாழ்வுரிமையை வலியுறுத்துகின்றாள்.
கோகிலா மகேந்திரனின் தூவானம் கவனம் [36] என்னும் நாவலிலும் விதவைகள் மறுமணம் செய்வதற்கு தடையாகவுள்ள சமூகநிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.

முடிவாக தமிழர் சமூகத்தில் சாதியின் பெயராலும் பண்பாட்டின் பெயராலும் பொருளாதாரபலம் அரசியல் அதிகாரம் ஆகியவற்றின் பெயராலும் பெரும்பாலானவர்கள் மனித உரிமைகளை பறிகொடுத்து வருகின்றனர். உரிமைகளைப் பறிகொடுத்த மக்கள் அறியாமையாலும் பொருளாதார பலமின்மையாலும் தமது உரிமைகள் பறிக்கப்படுவதை உணரமுடியாமலும் உணர்ந்தாலும் தட்டிக் கேட்க முடியாதவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் உலகெங்கும் ஒலித்த மனித உரிமைப் பறிப்புக்கு எதிரான குரல்கள் தமிழர் பண்பாட்டிலும்

தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் சாதியின் பெயரால் பறிக்கப்பட்ட மனித உரிமைகளை வழங்கச் சட்டம் இயற்றப்பட்டது; தொழிலாளர்களின் உரிமைகள் பல உறுதிசெய்யப்பட்டன; பெண்களின் வாழ்விலும் சில முன்னேற்றகரமான ஏற்பாடுகள் பேசப்பட்டன; ஆனால் இவை அனைத்தும் சட்டரீதியானவை. பொருளாதார வளங்களையும் சமூக அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள அதிகார வர்க்கத்தின் கீழ் அனைத்தையும் இழந்து நிற்கும் மனிதர்களுக்கு சட்டத்தின் கதவுகள் திறக்கப்படுவதால் மட்டும் உரிமைகள் கிடைத்துவிடப்போவதில்லை. சட்டம் சில வேளை ஏமாந்தும் போகலாம். எனவே மக்களின் மனக்கதவுகள் அகலத்திறக்கப்படவேண்டும் அதன் மூலமே எல்லோரதும் மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் கிடைக்கும்.

## அடிக்குறிப்புக்கள்.

1. கணேசலிங்கன்,செ., 1994, நீண்டபயணம், பாரிநிலையம் சென்னை.
2. டானியல்,கே., 1972, பஞ்சமர், தாரகை வெளியீடு, யாழ்ப்பாணம்.
3. ,, 1995, அடிமைகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை.
4. அகஸ்தியர், எஸ், 1992, எரிநெருப்பில் இடைபாதை இல்லை, ஜெகனி பதிப்பகம், மதுரை,
5. டானியல், கே., 1986, கானல், தோழமை வெளியீடு, கும்பகோணம்.
6. மேலது ப.325–326.
7. கணேசலிங்கன், செ., 1969, போர்க்கோலம், பாரிநிலையம், சென்னை.
8. மேலது ப . 32
9. தெணியான், 1973, விடிவை நோக்கி, வீரகேசரி வெளியீடு, கொழும்பு.
10. அகஸ்தியர், எஸ்., எரிநெருப்பில் இடைபாதை இல்லை, ப.179.

11. டானியல், கே., 1995, அடிமைகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை, ப.188

12. அகஸ்தியர், எஸ், எரிநெருப்பில் இடைபாதை இல்லை, ப. 81 – 82.

கணேசலிங்கன். செ. நீண்டபயணம், ப – 76

13. டானியல், கே., (1995, அடிமைகள், ப. 177.

14. பெனடிக்ற் பாலன், 1968, சொந்தக்காரன், பாரிநிலையம், சென்னை, ப. 31

15. மேலது ப. 47–48.

16. மேலது ப. 107.

17. கோகிலம் சுப்பையா, 1973, தூரத்துப்பச்சை, வீரகேசரி வெளியீடு, கொழும்பு. ப. 122.

18. நந்தி 1964, மலைக்கொழுந்து, யாழ்ப்பாணம், ப.23.

19. கோகிலம் சுப்பையா, தூரத்துப்பச்சை, ப.252.

20. வேலுப்பிள்ளை,சி.வி 1981, வீடற்றவன், வீரகேசரி வெளியீடு, கொழும்பு, ப. 109.

21. கோகிலம் சுப்பையா, தூரத்துப்பச்சை, ப.49.

22. மேலது ப. 83.

23. பெனடிக்ற் பாலன், சொந்தக்காரன், ப. 49.
24. ஜோசப்,தெளிவத்தை, 1974, காலங்கள் சாவதில்லை, வீரகேசரி வெளியீடு, கொழும்பு. ப. 43.
25. டேவிட்,கே.ஆர், 1976, வரலாறு அவளைத் தோற்றுவிட்டது, கொழும்பு, ப. 30.
26.செங்கை ஆழியான், காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள், யாழ்ப்பாணம்,
27. கணேசலிங்கன், செ, 1966, சடங்கு, பாரிநிலையம், சென்னை.
28. பாலமனோகரன்,அ. 1977, கனவுகள் கலைந்த போது, வீரகேசரி, கொழும்பு.
29. செங்கை ஆழியான், 1989, கிடுகுவேலி, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
30. மேலது ப. 3.
31. கணேசலிங்கன், செ., 1977, சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, பாரிநிலையம், சென்னை.

32. மேலது ப. 52
33. கணேசலிங்கன்.செ, 1999,குடும்பச் சிறையில், குமரன் பதிப்பகம், சென்னை.
34. மணிவாணன் 1972, யுகசந்தி, கொழும்பு.

35. மேலது ப. 156.
36. கோகிலா மகேந்திரன், 1988, தூவானம் கவனம், தெல்லிப்பழை.

## 3. ஈழத்துத் தமிழ் நாவல்களில் தமிழ்த்தேசிய உணர்வின் வெளிப்பாடுகள்.

இலக்கியம் மக்களின் வாழ்க்கையிலிருந்து மலர்வது. இதனாலே தான் நாம் இலக்கியங்களினூடாக மக்களின் வாழ்வியலைத் தேடுகின்றோம். இலக்கிய கர்த்தாவும் சமூகத்தில் ஒருவனாகவே இருப்பதால் அவனாலும் தான் வாழும் சமூகத்தைப் புறக்கணித்து விட்டு வெறும் கற்பனையில் இலக்கியம் படைக்க முடியாது போய்விடுகின்றது. அவ்வாறன்றி காலத்தோடு ஒட்டாத வாறும் சமூகயதார்த்தத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வகையிலும் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் கால ஓட்டத்தில் காணாமற் போய்விடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. நாவல் இலக்கியம் உரைநடையில் கதை கூறுகின்ற இலக்கியமாக இருந்தாலும் இதில் கூறப்படுகின்ற கதை வெறுங்கதையல்ல. இது சமூகத்தில் நிகழத்தக்கதொரு கதையாகவே அமைகின்றது. இதுவே நாவலுக்கு யதார்த்தப் பண்பினையும் கொடுக்கின்றது. இந்த வகையில் ஈழத்துத் தமிழ் நாவல்களைத் துணையாகக் கொண்டு இலங்கையில் 1950 களின் நடுப்பகுதியிலிருந்து ஊற்றெடுத்த தமிழ்த்தேசிய உணர்வின் இலக்கிய வெளிப்பாடுகளைத் தேடும் ஒரு ஆரம்ப முயற்சியாகவே இக்கட்டுரை அமைகின்றது.

இலங்கை பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக அடிமைப்பட்டிருந்த காலத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோருக்கிடையே இனமுரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அரிதாகவே இருந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய அரசு இந்தியத் தமிழர்கள் பலரை இலங்கைக்கு தோட்டக்கூலிகளாக அழைத்து வந்த போதும் சிங்கள மக்கள் இவர்கள் மீது எதிர்ப்புணர்வைக் காட்டவில்லை. ஆனால் 1927 இல் இலங்கைக்கு வந்த டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சின் படி 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டபோதே சிங்கள மக்கள் மத்தியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான உணர்வலை கிளம்ப ஆரம்பித்தது. இது படிப்படியாக சிங்கள - தமிழ் மக்களிடையேயான இனமுரண்பாடாக வளர்ந்து வந்தது. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் 1949 இல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இதனால் பல இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். 1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பலர் இந்தியாவிற்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

1956 இல் S.W.R.D. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார். தந்தை செல்வநாயகத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் இதனை எதிர்த்து காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தினர். இதனைத் தொடர்ந்து இவர்கள் திருகோணமலையில் நடாத்திய மகாநாடு தமிழர்கள் மத்தியில் இனவிழிப்புணர்வினை ஏற்படுத்தியது. இவ்வேளையில் சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் கலந்து வாழும் அம்பாறையில் இனக்கலவரம் மூண்டது. இதனைத்

தொடர்ந்து 1957 இல் தமிழரசுக்கட்சியினர் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை நடாத்தினர்., அதுவும் தோல்வியிலேயே முடிவடைந்தது. 1957 யூலையில் பண்டாரநாயக்கா தமிழர்களுக்கு சமஷ்டி வழங்குவதாக செல்வநாயகத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். எனினும் அது உடனடியாகவே கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1958 இல் மீண்டும் தென்னிலங்கையில் இனக்கலவரங்கள் மூண்டன. தென்னிலங்கையிலிருந்து தமிழர்கள் வடக்கிற்கு கப்பல்கள் மூலம் அகதிகளாக அனுப்பப்பட்டனர்.

1970 இல் உயர்கல்வி முறையில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையினால் வடபகுதியைச் சேர்ந்த குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்கள் பலர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். 1972 இல் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோது தமிழர்களுக்கிருந்த மிகக் குறைந்த சலுகைகளும் இல்லாமல் போயின. இந்நிலையில் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இதேகாலகட்டத்தில் உருவான தமிழ் இளைஞர் பேரவை தமிழ் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து இளைஞர்களின் தீவிரவாத இயக்கங்கள் உருவாகின. சிவகுமாரனின் தியாகம் இதன் தொடக்கமாகக் கொள்ளப்படுகின்றது. இதன்பின்னர் 1977 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலைத் தமிழர் விடுதலைக்கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கைக்கான

அங்கீகாரமாகவேகையாண்டு பெருவெற்றியீட்டியது. இவ்வெற்றியினால் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றார். நாட்டில் மீண்டும் இனவன்முறைகள் தீவிரமடைந்தன. தென்னிலங்கை யிலிருந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்குக் கப்பல்கள்மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு 1950களிலிருந்து இலங்கையில் சிங்கள – தமிழ் மக்களிடையே இனமுரண்பாடுகள் ஏற்பட்டு நாட்டில் அடிக்கடி இனக்கலவரங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழர்கள் தமது தேசியத்தை வலியுறுத்தி ஆரம்பத்தில் இணைப்பாட்சி கேட்டுப் போராடினர். இதனை ஏற்றுக்கொள்ளாத அரசாங்கங்கள் தமிழர்களின் தாயகப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியும் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கியும், கல்வியில் தரப்படுத்தல் முறையை அமுல்படுத்தியும் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழர்கள் சிங்கள மக்களுடன் இணைந்து ஒற்றையாட்சி அமைப்பினுள் வாழமுடியாது என்ற நிலைக்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் தமிழர் விடுதலைக் கூட்ணியினர் தனிநாட்டுக் கோரிக்கையினை முன்வைத்தனர். சாத்வீக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவர்களது போராட்டங்கள் எவ்வித பலனையும் தராத நிலையில் இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தில் ஆர்வம் காட்டினர். 1980களின் ஆரம்பத்தில் உருவாகிய இளைஞர்களின் தீவிரவாதம் இன்று தமிழீழத்திற்கான மரபுரீதியான படையணிகளைக் கொண்ட பாரிய விடுதலை இயக்கமாகவே தமிழர் படையை உருவாக்கி வளர்ச்சி

பெற்றுள்ளது. 1980களிலும் அதன் பின்னும் காணப்படுகின்ற இனரீதியான விழிப்புணர்வு 1956ஆம் ஆண்டுக்காலப்பகுதியிலேயே கருக்கொண்டதாகும். நாட்டின் அரசியல் சூழல் ஆக்க இலக்கியங்களில் இன உணர்வினை வெளிப்படையாக எடுத்துக்காட்ட சாதகமாக இருக்கவில்லை. எனினும் ஒரு சில படைப்புக்களில் இன உணர்வு தெளிவாகவே புலப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் தமிழ் இன உணர்வை நேரடியாகவே பிரதிபலித்த முதல் நாவலாக அமைவது மு.தளையசிங்கத்தின் "ஒருதனிவீடு" என்னும் நாவலாகும்.[1]

1960 இல் எழுதப்பட்ட இந்நாவல் 1970 இல் தமிழர் மத்தியில் உருவான தமிழ்த்தேசிய உணர்வினையும் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையினையும் தீர்க்கதரிசனத்தோடு முன்கூட்டியே எடுத்துக் கூறுகின்றது. 1960களில் தீவிரமாக இருந்த இடதுசாரிச் சிந்தனைகளால் தமிழர்கள் சிலரும் கவரப்பட்டிருந்தனர். ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைவரும் வாழலாம் என்றும் வர்க்கப் புரட்சியின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும் என்றும் இடதுசாரிகள் நம்பியிருந்தனர். இவ்வாறான இடதுசாரிச் சிந்தனையின் பிரதிபலிப்பாக இந்நாவலில் வருகின்ற கொம்யூனிஸ்ட் மாஸ்டர் என்ற பாத்திரம் அமைந்துள்ளது. கொம்யூனிஸ்ட் மாஸ்டரின் கருத்துக்களை மறுதலிப்பவராக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த நல்லசிவம் மாஸ்டர் இடம்பெறுகின்றார். நல்லசிவம் மாஸ்டரின் கருத்துக்கள் இடதுசாரிகளின் கருத்தை நிராகரிப்பனவாக அமைகின்றன. சான்றாக:

"........ நிரந்தரப் புரட்சியும் சர்வதேசியமும் தமிழனால் விழுங்க முடியாதவையப்பா. இப்ப விழுங்கப்படக்கூடாதவை. ஒருவேளை அவை விழுங்கப்பட்டாலும் அவை தமிழன்ர வயித்தில ஜீரணிக்கமுந்தி தமிழன் சிங்களவன்ர வயித்தில, அவன்ர இனத்துவேசப்பசியில், ஜீரணித்துவிட்டிருப்பான் அதற்குப்பின் தேசியமும் சர்வதேசியமும் கேலிக்கூத்து. சர்வதேசியமோ அல்லது அதற்கு முதற்படியாக நீங்க இங்க கருதும் தேசியமோ ஒரு இனம் மற்ற இனங்களை விழுங்கி ஏப்பம் விடுவதில பிறக்கக்கூடாது. எல்லா இனத்தவர்களும் தமக்குரிய உரிமைகளோடு ஒன்றாய்ச் சரிநிகர் சமனாய்ச் சங்கமமாவதுதான் சர்வதேசியம். அதை நாங்களும் விரும்பத்தான் செய்கிறோம். ஆனால் அதற்கு முந்தி, அதற்கு முதல் தேவையான எங்கள் உரிமைகளைப் பெற விரும்புகிறோம். சுதந்திர மக்களின் கூட்டுத்தான் தேசியமும் அதன் வளர்ச்சியுமான சர்வதேசியமும். அடிமைகளின் கூட்டு அல்ல....."[2]

1950 களின் நடுப்பகுதியிலிருந்து கோரமாக வெளிக்கிளம்பிய இனமோதல்களின் பிரதிபலிப்பு இங்கு வெளிப்படுகின்றது. இவர் கம்யூனிசத்தை எதிர்க்காவிட்டாலும் தமிழர்களின் உரிமைகளைப் பெற்ற பின்பே அந்தச் சித்தாந்தம் எமக்கும் பயன்படலாம் என்று கூறுகின்றார். மேலும்,

"தேசியம், சர்வதேசியம் என்று பீத்தித்திரியும் இந்த கொம்யூனிஸ்டுகள் உள்ளூர் விவகாரங்களுக்கு

வரும்போது முக்கியமாக தமிழ் - சிங்களப் பிரச்சினை வரும்போது ஏன் பதுங்க வேண்டும்.?

கொம்யூனிசப் பார்வையில் தமிழர் கேட்கும் உரிமைகள் நியாயமானது என்பதை ஏன் இவர்கள் அடித்து ஆணித்தரமாகச் சொல்லக்கூடாது?

லெனின் அகராதியில் எல்லா சிறுபான்மையினமும் பெரும்பான்மையினம் அனுபவிக்கும் சகலவிதமான உரிமைகளையும் பெற்றிருக்க வேண்டும் என்று தானே கூறுகின்றது. அப்படி இருக்க அதுபற்றி வாய்திறக்க இவர்களேன் அஞ்சவேண்டும்? இப்படி இருப்பதால் தான் சிங்களவர் மத்தியில் நாம் முற்போக்குவாதிகளாய் இருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம் என்ற பேதமையா? உள்ளூர் சாதிப்பிரச்சினையில் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்சாதிக்கெதிராகப் போராடத் தூண்டுவதில் முழு மூச்சாக நிற்கும் இவர்கள் ஏன் சிங்களவர் தமிழரின் நிலம், மொழி, கலாசாரம் யாவற்றையும் சூறையாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்?

இதுதான் மார்க்சியம் லெனினிசம் காட்டும் முற்போக்கா? ஏன் இந்த இரட்டை வேடம்?" [3]

1960இல் இடதுசாரிகளை நோக்கி தமிழரசுக்கட்சியினர் சார்பில் மு.தளையசிங்கம் முன்வைத்த இவ்வினாக்கள் காத்திரமானவை. இந்தவினாக்களின் நியாயப்பாடுதான் 1980களில் தமிழ்மக்கள் மத்தியில் இடதுசாரி இயக்கங்களுக்கு ஏற்பட்ட தோல்வி எனலாம்.

மு.தளையசிங்கம் தனது நாவலில் 1956.இல் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் பற்றியும் இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட போராட்டங்கள், இனப்படுகொலைகள் முதலியவற்றையும் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். சான்றாக, 1958இல் தெற்கில் நடந்த இனக்கலவரங்களின் போது பாணாந்துறையில் இருந்த இந்துக்கோயில் உடைக்கப்பட்டு அங்கிருந்த பூசகரும் மனைவியும் சித்திரவதைசெய்யப்பட்டமை பற்றியும் கோயிலுக்குள் தஞ்சம் புகுந்தவர்களையும் வெளியே இழுத்துவந்து தாக்கிய பின்னர் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தியமை பற்றியும் கலாவலையில் கால்வெட்டப்பட்டு வயிறு கிழிக்கப்பட்டு காட்டுக்குள் குற்றுயிராய் ஊர்ந்த மனிதஉயிர்கள், அங்கங்கள் சிதைக்கப்பட்டு ஆற்றுவெள்ளத்தில் மிதந்த சடலங்கள் பற்றியும் தமிழ்ப் பெண்கள் தாம்கட்டிய கணவன் முன்னிலையிலேயே நிர்வாணமாக்கப்பட்டு மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்ட கதைகள் பற்றியும் இவர் ஆங்காங்கே எடுத்துக்கூறுகின்றார். இத்தகைய துன்பமான நிலைதான் தமிழர்களைத் தமது தேசியம் தொடர்பாகச் சிந்திக்க வைத்திருக்கலாம். சான்றாக,

“காய்ந்துபோன தோற்றங்களோடும், கப்பலின் அழுக்கு நிறைந்த உடைகளுடனும் அகதிகள் பரிதாபமாக வந்து கொண்டிருந்தனர். உடமையென்பது எதுவுமே இருக்கவில்லை. உயிர்?.. ம்ம்...அது அதற்குப்பின் இருந்துதான் என்ன பயன்..? உரிமை ஒன்றைக் கேட்டதற்காக உழைப்புப்போய், உடமைகள் எல்லாம் போய், உயிர் இருந்தும் இல்லாதது போல் பயனற்ற

பரிதாப நிலையில் வந்து கொண்டிருந்தனர். ஆ! தமிழா! இதுவா உன்நிலை.? ஒரு காலத்தில் உச்ச நிலையில் இருந்து கொண்டு, இந்த உலகத்தின் ஒரு பெரும் பகுதியை நீ ஆண்டியாமே. ஒரு காலத்தில் உனது நாகரிகம், உனது ஆட்சிஎல்லாம் உலகமெல்லாம் தெரிய இருந்தனவாமே அவை எல்லாம் உண்மைதானா? அப்படியென்றால் உனக்கேன் இப்போ இந்த நிலை. உன் நலனைக் கவனிக்க ஒரு அரசாங்கம் இருக்கின்றதா? உன்னைப் பாதுகாக்க ஒரு படை இருக்கிறதா? உலக ஸ்தாபனத்தில் உன்குரலை எழுப்ப ஒரு வழி இருக்கிறதா? இலங்கை, இந்தியா என்று எங்குமே நீ பரந்து கிடக்கிறாயாமே, அப்படியென்றால் இப்படி ஏன் பார்த்துக்கிடக்கிறாய்.? சுதந்திரத்தைப் பெற்று ஏதோ ஒரு காங்கிரசுக்கும், மகாஜன முன்னணிக்கும் கொடுத்துவிட்டு பரிதாபமாக, இப்போ அகதியாய் போகிறாயே, வெட்கமடா தமிழா, வெட்கம்!"[4]

இந்த நிலையிலும் இடதுசாரிகளின் சிந்தனை தமிழ்த்தேசிய உணர்வுக்கு மாறாகவே இருந்தது என்பதை இவர் கம்யூனிஸ்ட் மாஸ்டரின் வார்த்தைகளால் புரியவைக்கின்றார்.

"...நீங்க எல்லாம் சமஷ்டி, தமிழரசு எண்டு கத்தித் திரிந்ததாலதானே இந்தக் கதி வந்தது. இப்ப எத்தனை ஆயிரம் பேர் செத்திற்றினம். எத்தனை ஆயிரம் பேருடைய வீடு,கடை எல்லாம் கொள்ளை போயிற்று. நீங்க சும்மா இருந்தா அவங்களும் சும்மா இருந்திருப்பாங்களே."[5]

என்ற கம்யூனிஸ்ட் மாஸ்டரின் கருத்திற்கு தமிழரசுக்கட்சி ஆதரவாளனான இளைஞன் சிங்கராசன் கூறும் பதில்,

"... உரிமையைக் கேட்டதுதான் எங்கட குற்றம், அதற்காக அவங்க அடிக்கிறாங்க. அதுதான் பெரும்பான்மை ஆட்சி, அந்த ஒரு காரணமே போதும் அவங்கட தயவில நாங்க இருக்கக்கூடாது என்பதுக்கு அந்த ஒண்டே போதும் அவங்களை நம்பி நாங்க வாழக்கூடாது என்பதுக்கு. இனிநாங்க ஒரு சமஷ்டி கேட்கக்கூடாது மாஸ்டர். இனித்தனித்தமிழ்நாடு கேட்பது, அதற்காகப் பேராடுவதுதான் தமிழன் செய்ய வேண்டிய வேலை. அதில்வரும் கஷ்டங்களைத் தவிர்க்க முடியாது. ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. சரித்திர நியதி அது. சுதந்திரம் கிடைக்கிற வரைக்கும் நாம் போராடுவோம். போராடுகிற போது எங்களில் பலர் சாவினம். அதுக்காக நாங்கள் பயந்திட மாட்டம். ஆனால் அதுக்காக நாங்கள் சாகிறவரில் இரக்கப்படவில்லை எண்டு அர்த்தமில்லை மாஸ்டர். ஒவ்வொரு தமிழனின் உயிருக்காகவும் எங்கட மனம் துடிக்கும்" [6]

இவ்வாறு கூறும் சிங்கராசன் தனது மனைவிக்கும் இதே கருத்தினையே கூறி அவளையும் போராடத் தயார்ப்படுத்துகின்றான்.

"நமக்கு ஒரு நாடு, நமக்கு ஒரு அரசாங்கம், நமக்கு ஒரு பாதுகாப்பு என்ற பெரிய வீடு...."

"....அழுகிற நம்ம பயல் சிறப்பாக வளரவும் நமக்கெண்டு ஒரு புதிய வீடு தேவை."
"அதுவரைக்கும் நான் போராடுவேன். இல்லை நாம் போராடுவோம். நம் சந்ததியார் எல்லோரும் போராடுவோம். நமக்கு ஒரு நாடும் அரசும் ஒரு கூட்டாட்சியின் கீழ் தரமறுத்தால் ஒரு தனிநாடு அல்லது கடல்கடந்த ஒரு பரந்த தமிழ்நாட்டின் கூட்டாட்சியாவது அமைக்க வேண்டும். அதற்காகவாவது போராடுவோம். இங்கு யார் வராவிட்டாலும் நான் போராடுவேன். மறைமுகமான ஒரு "அண்டர்கிறவுண்" பயங்கர இயக்கமாவது என் தலைமையில் அமைத்துப் போராடுவேன்" [7]

சிங்கராசனின் கூற்றாக தளையசிங்கம் கூறிய கருத்துக்கள் இன்று நிதர்சனமாகவே இருப்பதை நோக்கும் போது தளையசிங்கத்தின் தீர்க்கதரிசனத்தை உணரமுடிகின்றது. அன்றைய நிலையில் இது ஒரு துணிச்சலான இலக்கிய முயற்சியும்தான். இடதுசாரிகள் அல்லாத ஏனைய எழுத்தாளர்கள் எவருமே துணிந்து வெளிப்படையாக எழுத முற்படாத விடயங்களை இவர் எழுதியது ஆச்சரியமாகவே உள்ளது.

ஒருதனிவீட்டினூடாக தனிநாடுதான் வேண்டும் என்று 1960இல் தளையசிங்கம் கூறியதைத் தொடர்ந்து 1972இல் சாந்தன் ஒட்டுமா என்ற குறநாவலொன்றை எழுதினார்.[8] இது 1976இல் தினகரன் பத்திரிகையில் தொடராக வெளியிடப்பட்டுப் பின்னர் 1978இல்

நூலுருப்பெற்றது. இந்நாவலில் கட்டுப்பெத்தவிற்கு கல்விகற்கச் சென்ற தமிழ் மாணவன் ஒருவன் சிங்கள வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த போது அவ்வீட்டுப் பெண்ணைக் காதலிப்பதையும் இறுதியில் இக்காதல் இரு பகுதிப் பெற்றோராலும் நிராகரிக்கப்பட்டுத் தோல்வியில் முடிவதும் காட்டப்படுகின்றது. காதலின் தோல்விக்கு இருவேறு இனங்கள் கலப்பது சாத்தியமில்லை என்பதே காரணமாகக் காட்டப்படுகின்றது. நிலாந்தியின் தந்தை பீரிஸ் சதாவுக்குக் கூறுகின்றார்,

“சதா நீ இந்தப்பக்கங்களிலே புழங்குறது சரி – ஆனால் நிலாந்தியின் வாழ்வில் குறுக்கிடமுயலாதே! ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள் - எங்கள் இரத்தங்கள் வெவ்வேறு அவை கலக்க முடியாது” [9]

சதாவின் தரப்பில் அவனது பெற்றோர் கூறும் காரணங்கள் சற்று வித்தியாசமானவை, சதாவின் தகப்பன்,

“..உனக்குப் பின்னாலை இருக்கிற சகோதரங்களை யோசிச்சியா? நீ இப்படி ஒண்டைச் செய்தா, அதுகளின்ர காலத்திலை என்ன நடக்கும்? தமையன் வேறு இனத்தாளைக் கட்டினவன் எண்டபேரே போதும். எங்களுக்காக வேண்டாம் அதுகளை மனசில வைச்சுயோசி”[10]

இக்குரலில் இனமுரண்பாட்டின் தீவிரமோ குரோதமோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்துத் திருமணங்களின் சாதாரணமான சிக்கல்களே புலப்படுத்தப்படுகின்றது. எவ்வாறெனினும் இரு இனங்களையும் இணைப்பதை இந்நாவலாசிரியர் விரும்பவில்லை. இதன் மூலம்

தமிழினத்தின் தனித்துவத்தை சிதையவிடாமல் பாதுகாப்பதில் இந்நாவலாசிரியர் காட்டும் அக்கறை புரிந்து கொள்ளக் கூடியதே.

டிசெம்பர் 1978இல் வெளிவந்த அருளரின் "லங்காராணி"[11] என்னும் நாவல் 1977க் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் லங்காராணிக் கப்பலில் வடக்கு நோக்கி அகதிகளாக வருவதை எடுத்துக் காட்டுவதனூடாக எமது பிரச்சினை தனியரசு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே தீர்க்கப்படமுடியும் என்பதை எடுத்துக் கூறுகின்றது.

கப்பலில் இலங்கையின் இனமுரண்பாடுகள் தொடர்பாக விவாதித்த இளைஞர்களில் ஒருவன்,

"அது சரி, அந்நியன் இங்கிருந்து போய்விட்டான். அதற்காக நாம் ஏன் சிங்களவருடன் மோதவேண்டும்" எனக்கேட்டபோது மற்றொரு இளைஞன் அதற்கு,

"அந்நியர் சட்டத்தின் அரசு, தி ரூல் ஒவ் லோ, என்ற போர்வையில் சட்டங்களை இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டதால் தங்கள் அடக்கு முறைகளை நடைமுறைப்படுத்தியது போல, ஒரே நாட்டுக்குத் தேவையான உயர்ந்த இலட்சியங்களையோ கோட்பாடுகளையோ பொதுமைப்பாட்டையோ முன்வைக்காமல் ஒரே நாடு என்ற போர்வையில் பெரும்பான்மையரின் பலமே சட்டங்களாக மாறும் நிலையால் தொடர்ந்து அடக்குமுறை நீடிப்பதே இந்த நிலைமைக்கு முக்கிய

காரணம் என்று சொன்னான். தொடர்ந்து கூறுகையில் ஆங்கிலேயர் விட்டுச்சென்றவற்றின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு இவர்கள் தங்களை அறியாமலே ஆங்கிலேயர்களைப் போல் நடந்து கொள்வதனால் தமிழர்கள் தங்கள் நாட்டுச் சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒரு இனமாக இருப்பதால் இந்த உரிமையை அதாவது பிரிந்து போய் தனியான நாடு காணும் உரிமையை, சுயநிர்ணயஉரிமை, தி ரைட் ரு செல்வ் டிற்றேமினேசன் எங்கள் போராட்டத்திற்கு நாங்கள் பிரயோகிப்பதாக அமையும். இதில் எவ்வாறான தவறும் இல்லை என்றும் கூறினான். இலங்கை ஒரே நாடாகத் தொடர்ந்தும் இருக்க இந்த அரசு இரண்டு இனங்களுக்குமிடையில் ஏற்படும் உடன்பாடாக அமைய வேண்டுமேயொழிய ஒரு நாடு ஒரு மொழி வேண்டுமென்ற போர்வையில் ஒரு இனம் தனது மொழியையும் கலாசாரத்தையும் திணித்து இன்னொரு இனத்தை சிதைத்து அழிக்க முற்படுவதாக இருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டான்.”[12]

இளைஞர்களின் கருத்துக்களைக் கேட்டவாறே இருந்த நாகலிங்கமும் கொழும்பு வியாபாரி ஒருவரும் தமக்குள் விவாதிக்கின்றனர். நாகலிங்கம்,

“இந்தக் கட்சி அரசியல் இருக்கும் மட்டும் அப்படித்தான் பிரிக்க ஏலுமானஅளவு பிரிச்சு வெறி ஏத்தி ஒருத்தனை ஒருத்தனோடு மோதவிட்டு எல்லாத்தையும் நாமாக்கி, கண்டதுகளையும் கிளறிவிட்டு, அதே நேரத்தில் மக்கள் மக்கள் என்றும் கத்திக்கொள்வாங்கள். பிரச்சினைகளை

இப்படிக் கிளப்பிவிட்டுப் போட்டு யானைதான் பலமான மிருகம், அதால ஏலாதது ஒன்றுமில்லை, யானைக்குப் போடுங்கள் என்கிறான்கள். எனி கையில்லாம என்ன செய்யப்போறீங்க, கைக்குப் போடுங்க எண்டு அவையள் மற்றப்பக்கத்தால, யானைக்குப் போட்டுப்பாத்தாங்கள் சரிவரவில்லை, பிறகு கைக்கு. இப்படியே பிறகு இந்தா யானைக்கு, மாறிமாறி களைச்சுப்போன சனம் என்ன செய்யும் எத்தனை நாளைக்கெண்டு "[13]

என்று அரசியல் வாதிகளின் கபடத்தனத்தால் மக்களிடையே இன மோதல்கள் ஏற்படுவதை எடுத்துக் கூறுகின்றார். நாகலிங்கத்தின் பேச்சைக் கேட்டுப் பொறுமையிழந்த கொழும்புவியாபாரி 'அப்ப இதுகளுக்கு என்ன செய்யலாம் சொல்லுங்கோ' என்று கேட்டபோது நாகலிங்கம்,

"பிரிய வேணும், பிரியவேணும், இதுபாருங்கோ வெள்ளைக்காரன் கண்மூடித்தனமாகச் செருகிவிட்டிட்டுப் போயிருக்கிறான். முதலில பிரியவேணும். இலங்கையர் இலங்கையர் என்று சும்மா சொல்லுகிறதுல ஒன்றுமில்லை பாருங்கோ. நாங்களாகஒன்று சேர்ந்து இது ஏற்படவில்லை பாருங்கோ. வெள்ளைக்காரன் விட்டுவிட்டுப் போனதுகளை வைச்சுக்கொண்டு வெட்டிக்கொத்திக் கொண்டு கிடக்கிறம். நாங்கள் யார் என்பதை முதலில நிர்ணயிக்க வேண்டும் பாருங்கோ. அப்படிப் பார்க்கப் போனால் தமிழ், சிங்களம் எண்டு தான் வருகுது. முதலில நாங்கள் பிரிஞ்சு எங்கட எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும் பாருங்கோ.

இல்லாவிட்டால் இப்ப நடக்கிற மாதிரி நாங்கள் வெட்டிக்கொத்திக்கொண்டு கிடக்க யார் வேண்டுமானாலும் இங்கை வந்து எதுவும் செய்து விட்டுப் போய்விடுவாங்கள். பிரிகிறது எங்களுக்கும் நல்லது. அவங்களுக்கும் நல்லது.[14]

என்று இலங்கைப் பிரிவினையை வலியுறுத்திக் கூறினார். கொழும்பில் ஏராளமான சொத்துக்களையும் வியாபாரநிலையங்களையும் வைத்திருக்கின்ற யாழ்ப்பாணத்துத் தமிழர்களில் ஒருவரான இந்த கொழும்பு வியாபாரிக்கு இலங்கையைப் பிரித்துவிடுவதில் அவ்வளவு உடன்பாடில்லை. இவர்களின் வியாபாரம் தென்னிலங்கையை நம்பியே இருந்து வருகின்றது. இதனால் இவர்கள் நாட்டின் பிரிவினையை விரும்புவதில்லை. நாகலிங்கத்தின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருந்த கொழும்பு வியாபாரி,

“அப்ப நீங்கள் சொல்லுகிறியள் இதைப் பேச்சு வார்த்தைகளால் தீர்க்க ஏலாதென்று” எனக் கேட்ட போது நாகலிங்கம்,

“என்ன பேச்சுவார்த்தை பாருங்கோ. இந்தச் செல்வநாயகமான செல்வநாயகமும்தானே பேசித் தீர்க்கலாமெண்டு திரிஞ்சது. அது செய்யக்கூடிய காலமெல்லாம் போயிட்டுது பாருங்கோ.... எங்கடை பொடியன்களும் பாருங்கோ இந்தப் பேச்சு வார்த்தையெல்லாம் போதுமெண்டு நிற்கிறான்கள்.”[15]

என்று கூறும் போது சமாதான வழிமுறைகள் பயனளிக்காத நிலையில் தீவிரவாத நடவடிக்கைகளால் பிரிவினைகோரிப்போராடும் நிலை ஏற்பட்டதென்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

செங்கை ஆழியானின் அக்கினி என்னும் நாவல் 1991இல் வெளிவந்தது.[16] வடக்கிலும் கிழக்கிலும் போர்ச்சூழல் நிலவிய காலகட்டத்தில் தமிழ் மக்கள் பலர் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகிவிட்ட சூழலில் வெளிவந்த இந்நாவலில் வருகின்ற பாத்திரங்கள் தமிழ்த்தேசிய உணர்வினையும் பிரிவினை தொடர்பான கருத்துக்களையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். வசாவிளானிலுள்ள தோலகட்டி ஆச்சிரமத்தில் வைத்து அருட்சகோதரர் மனுவல் வென்செஸ்லாஸ் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்த இளைஞன் கந்தசாமி ஆத்திரப்படுகின்றான். இந்த அநியாயங்களுக்குப் பதில் சொல்லும் காலம் வரும் என்று குமுறுகின்றான். எமது முன்னோர்கள் விட்ட தவறுகளாலேயே இன்று இத்தகைய துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது என்று பேரனான வேலுப்பிள்ளையிடம் தனது மனக்குமுறலை வெளிப்படுத்துகின்றான்.

“எங்கட மூதாதையர்கள் விட்ட பிழைகள் இப்ப விடிஞ்சிருக்குது. சிங்கள மக்களின் மூதாதை விஜயன் என்ற ஆரியன் இங்க வாறதுக்கு முந்தி இந்த மண்ணில் திராவிடர் அதாவது நாங்கதான் இருந்தம். விஜயன் வந்த போது அவனுக்கு உணவும் கொடுத்து,

தன்னையும் கொடுத்ததால விஜயனும் அவன் கூட்டாளிகளும் இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டினம். அவனை மணந்ததன் மூலம் அவர்களை இங்க நிலைகொள்ள வைத்த தவறை குவேனி செய்தாள், அப்பு அது முதல் தவறு....[17]

"....எல்லாளன் என்ற தமிழ் மன்னன் விட்டது இரண்டாவது தவறு. இந்தக்கிழச் சிங்கம், துட்டகைமுனு என்ற இளைஞன் தனிப்போருக்கு அழைத்தபோது உடன்பட்டிருக்கக் கூடாது. இலங்கையின் பெரும்பகுதியை ஆண்ட இந்த எல்லாளன், தன் மானத்திற்காகத் தனிப்போருக்குப் போய், தமிழ் மக்களின் சுயாட்சியை அடகுவைத்த தவறினைச் செய்தான்"[18]

"போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றும் வரை யாழ்ப்பாண இராச்சியம் என்ற தனியரசு இருந்திருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி இருந்திருக்கிறது. தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களாக அவை இருந்துள்ளன. நமது நாட்டுக்குச் சுதந்திரத்தை ஆங்கிலேயர் வழங்கிய போது, பொன்னம்பலம், இராமநாதன் போன்ற நமது மூதாதையர்,தீர்க்கதரிசனத்துடன் சிந்திக்கத் தவறிவிட்டனர். இந்தியாவில் முஸ்லிம்களுக்கென ஒரு தனிஅரசினை நிறுவ ஜின்னா புத்திசாலித்தனமாகச் செயற்பட்டதைப்போல இவர்கள் செயற்படவில்லை. முஸ்லிம் சிங்கள இனக்கலவரத்தில் சிறைவைக்கப் பட்டிருந்த சிங்களத் தலைவர்களை இங்கிலாந்து சென்று மகாராணியைப் பேட்டி கண்டு சிறைமீட்ட நன்றிக்காக, தேரில் ஏற்றி குதிரைகளுக்குப் பதிலாக சிங்களத்

தலைவர்களே கொழும்பு வீதியில் தேரை இழுத்துச் சென்றனர். அந்த நிகழ்ச்சியால் பொன்னம்பலம், இராமநாதன் சிங்கள மக்களுடன் என்றும் ஒற்றுமையாக வாழலாம் என்ற தப்புக்கணக்கில் தவறிழைத்தார்."[19]

எனக் கூறுகின்றான். கந்தசாமியின் வார்த்தைகள் இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே என்றும் எல்லாள மன்னன் தொடக்கம் பொன்னம்பலம் - இராமநான் போன்ற அரசியல் வாதிகள் வரையானோர் விட்ட தவறுகளாலேயே தமிழ் மக்கள் தமது ஆட்சி உரிமையை இழந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்ற கருத்து எடுத்துக் கூறப்படுகின்றது. இலங்கையின் புராதன வரலாறு தொடர்பாக வரலாற்றாய்வாளர் களிடையே குழப்பமான கருத்துக்கள் இருந்து வருகின்ற போதும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வு தோற்றம் பெற்றபோது இவ்வாறான வரலாற்றுச் சம்பவங்களும் அவர்களின் உணர்வுகளுக்கு வலுவூட்டிவந்ததை இக்கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இதே கந்தசாமி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் வழியில் ஆனையிறவில் இராணுவத்தினரால் கைது செய்யப்படுகின்றான். சிறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட கந்தசாமி தன்னையும் தன்போன்றவர்களையும் அநியாயமாகப் பிடித்து வதைப்பவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று நினைக்கின்றான். தந்தை ஷெல்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்து இறந்த காட்சி அவனது மனதில் மேலும் பழிவாங்கும் எண்ணத்தை வலுப்படுத்துகிறது.

சிறைச்சாலையில் இருந்த போராளியான தவம் என்பவனது கருத்துக்களும் கந்தசாமிக்கு வாழ்வுக்கு புதிய அர்த்தத்தைக் கொடுத்து விடுகின்றன. இதனால் சிறையிலிருந்து மீண்ட கந்தசாமி போராளியாக மாறுகின்றான். வெளிநாட்டிற்குச் சென்று உழைக்க வேண்டும் என்ற ஆசையை மறந்து தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராட முடிவெடுத்த கந்தசாமி தனது முடிவை கனகசபைக்கு விளக்கமாகக் கூறுகின்றான். கந்தசாமியின் கருத்துக்கள் தமிழ்த்தேசிய உணர்வின் அவசியத்தையும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போரின் நியாயத்தையும் தெளிவுபடுத்துவதாக உள்ளன. அவன்,

“இலங்கையில் நாங்க 25 சதவீதம்தான், சிங்கள மக்கள் 74 சதவீதம் தான். நான் அதை மறுக்கவில்லை அவர்கள் பெரும்பான்மையினர் தான் நாங்கள் சிறுபான்மையினர் தான் ஒத்துக் கொள்கின்றேன். ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களாகிய நாங்கள் பாரம்பரியமாக, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்றோம். பரம்பரைத் தாயகம் இப்பிரதேசம்..... நமக்கென்று ஒரு அரசு ஒரு நாடு இருந்திருக்கின்றது, ஆங்கிலேயர்கள் தமது இலகுவான நிர்வாகத்திற்காக நமது பாரம்பரியப் பிரதேசங்களைச் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களுடன் இணைத்தார்கள். சுதந்திரம்

வந்தபோது நமது பாரம்பரியப் பிரதேசங்களைப் பிரித்துப் பெறத் தவறிவிட்டோம்.
ஒற்றையாட்சியின் கீழ் சிறுபான்மை மக்களது நலன்கள் பாதுகாக்கப்படும் என நம்பி ஏமாந்தோம். 1956 இல் தனிச் சிங்களச்சட்டத்தின் மூலம் மொழியுரிமை இழந்தோம், ஐம்பதுகளிலிருந்து தமிழ் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டு வரும் குடியேற்றத்திட்டங்களால் நமது மண்ணைஇழந்தோம். அரசு திட்டமிட்டுத் தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமித்தது பதவியா, கந்தளாய், கல்லோயா, அல்லையெனத் தமிழ்ப்பிரதேசங்கள் ஒவ்வொன்றாகப் பறிபோயின. தரப்படுத்தலால் தமிழ் மக்கள் கல்வியிழந்தார்கள், உத்தியோகங்கள் மறுக்கப்பட்டன, இரண்டாம் தரப் பிரஜைகளாகத் தமிழ் மக்கள் ஆக்கப்பட்டனர்......"

".......தென்னிலங்கையில் காலத்திற்குக் காலம் தோன்றிய இனக்கலவரங்களில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர், பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் தமிழ்மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன, ஒருமுறையல்ல, பலதடவைகள். தென்னிலங்கையில் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். 1956இல், 58இல், 77இல், எல்லாவற்றிற்கும் உச்சமாக 83இல், தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர், குதறப்பட்டனர், தென்னிலங்கையில் அகதிகளான தமிழ்மக்கள் தமக்கென ஒரு பிரதேசம் வடக்கிலும் கிழக்கிலுமிருக்கின்றதெனக் கப்பல்களில் ஓடிவந்தார்கள்.

ஆனால் இன்று-? அப்பிரதேசங்களிலும் தமிழ் மக்கள் அகதிகளாகின்ற காட்சி. தமிழ் மக்களுக்கு நிம்மதியாக தம் சுதந்திரத்தைப் பேணி வாழ ஒரு பிரதேசமில்லை என்ற நிலை இன்று உருவாகிவிட்டது. இப்படிப்பட்ட நிலையில் தான் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி யுள்ளார்கள். இவர்களில் ஒருவனாக நானும் மாறிவிடலாம். என்றிருக்கிறேன்''[20]

மேற்படி கந்தசாமியின் வார்த்தைகள் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கையில் தமிழ்த்தேசிய உணர்வு ஏன் உருவாகியது என்பதற்கான தமிழர் தரப்பு நியாயங்களைத் தெளிவுபடுத்துகின்றன.

தொகுத்து நோக்கும் போது சுதந்திர இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தவறான அரசியல் அணுகுமுறைகளினால் 1950களின் நடுப்பகுதியிலிருந்து இனரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டு அவை தென்னிலங்கையில் அடிக்கடி இனக்கலவரங்களை ஏற்படுத்தின. இக்கலவரங்களினால் தெற்கில் தமிழர்கள் வாழமுடியாத நிலை ஏற்பட்டது. 1977இல் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அன்றைய நிலையில் யாழ்ப்பாணம் இவர்களுக்குப் பாதுகாப்பான வாழிடமாக இருந்தது. ஆனால் 1980களில் தமிழர்களுக்கு வடக்கு கிழக்கிலும் கூடப் பாதுகாப்பாக வாழமுடியாத நிலை உருவாகியது. இத்தகைய சூழலிலேயே தமிழ் அரசியல் வாதிகள் தமிழர்களின் இருப்புத் தொடர்பாகத் தீவிரமாகச் சிந்திக்க முற்பட்டனர். தமிழர்கள் இலங்கையில் ஒரு தேசிய

இனம் என்பதையும் அவர்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையும் இவர்கள் வலியுறுத்த ஆரம்பித்தனர். அரசியல் அரங்கில் இத்தகைய கருத்துக்கள் தீவிரம் பெறுவதற்கு முன்பே மு.தளையசிங்கம் தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்பதைத் தனது நாவலினூடாக எடுத்துக் கூறியிருந்தார். மு.தளையசிங்கத்தின் கருத்திற்கு வலுவூட்டுவதாக அருளரின் லங்காராணி என்ற நாவல் அமைந்தது. இந்நாவல் அன்றைய சூழ்நிலையில் தென்னிலங்கையில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழமுடியாது என்பதையும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களே தமிழர்களுக்குரிய பிரதேசம் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. ஆனால் 1980களின் ஆரம்பத்திலிருந்து வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிற்கூடத் தமிழர்கள் பாதுகாப்பாக வாழமுடியாத நிலை தோன்றிய போது தமிழ் இளைஞர்கள் சாத்வீக வழிமுறைகளை விடுத்து ஆயுதப் போராட்டவழியில் தமிழர்களின் உரிமைகளைப் பெற முயன்றனர். இப்போராட்டச் சூழலில் தமிழ்த்தேசியம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பனபற்றியெல்லாம் விரிவாகப்பேசப்பட்டது. இவற்றை செங்கை ஆழியானின் அக்கினி போன்ற நாவல்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்த் தேசியத்திற்கான போராட்டத்தின் போது கிடைத்த அனுபவங்களையும் பலாபலன்களையும் ஆய்வு செய்வதே அடுத்தகட்டத் தேவை என்பதை உணர்ந்து கொண்டாலும் தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த ஆய்வு இங்கு இடம்பெறவில்லை.

## அடிக்குறிப்புக்கள்.

1. தளையசிங்கம்,மு., (1984) ஒரு தனிவீடு, சென்னை.
2. மேலது. ப. 142.
3. மேலது. ப. 143.
4. மேலது. ப. 187.
5. மேலது. ப. 188.
6. மேலது. ப. 189.
7. மேலது. ப. 214.
8. சாந்தன், (1978) ஒட்டுமா, யாழ்ப்பாணம்.
9. மேலது. ப. 71.
10. மேலது. ப. 75.
11. அருளர், (1988) இரண்டாம் பதிப்பு லங்காராணி, யாழ்ப்பாணம்.
12. மேலது. ப. 54-55.
13. மேலது. ப. 81-82.
14. மேலது. ப. 83.
15. மேலது. ப. 84.
16. செங்கை ஆழியான், (1991,) அக்கினி, யாழ்ப்பாணம்.
17. மேலது. ப. 47.
18. மேலது. ப. 48.
19. மேலது. ப. 48.
20. மேலது. ப. 91.

# 4. போர்க்கால வாழ்வின் அவலங்கள்

**- செங்கை ஆழியானின் இரண்டு நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேடல்**

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவதன்று இவ்வுலகத் தியற்கை" (புறம் 76)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் புறநானூற்றுப் புலவன் ஒருவனிடமிருந்து ஒலித்த இக்குரல் நிலவிலே கால்பதித்து விண்ணுலகை வெற்றிகொண்ட இன்றைய உலகிலும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது என்றால் அது புறநானூற்றுப் புலவனுக்குக் கிடைத்த வெற்றி என்றும் சில சங்குகள் முழங்கலாம். ஆனால் இது விண்ணிலே கொடிபொறித்த மனித சமுதாயத்திற்குக் கிடைத்த மாபெரும் தோல்வி என்பதை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அறிவியல் ஆகாயத்தைத் தொட்டுவிட்ட இவ்வேளையிலும் உலகெங்கும் அவலக் குரல்கள் ஒலித்த வண்ணமேயுள்ளன. விலைமதிப்பற்ற மனித உயிர்கள் அறிவியல் படைத்த ஆயுதங்களுக்குப் பலியிடப்படுகின்றன. இதனால் உலகெங்கும் ஒரே அவலக் குரல்: அரசியல் அதிகாரத்தைத் தமது கைகளில் வைத்துக் கொண்டு யுத்தத்தை நடாத்துபவர்களுக்கும் ஆயுத வியாபாரிகளுக்கும் இது மதுர கானமாக ஒலிக்கலாம். ஆனால் தினம் தினம்

உயிர்களைப் பலிகொடுத்தும் உடைமைகளை இழந்தும் அழிந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு இது ஒரு வாழ்க்கைப் போராட்டம். உலகெங்கும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இவ்வாறான போராட்டத்தின் ஒரு அங்கம் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் நடைபெற்று வருகின்றது. இலங்கையில் 1980 இன் பின்னரான வாழ்க்கை தமிழ் மக்களுக்கு உயிர்காக்கும் போராட்டமாகவே அமைந்துவிட்டது. இந்த வாழ்வின் அவலங்களை செங்கை ஆழியானின் **போரே நீபோ,**[1] மரணங்கள் மலிந்த பூமி[2] ஆகிய இரு நாவல்களி னூடாக எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அவலமான மரணங்கள்

போர் என்றாலே உயிரிழப்பு, இரத்த வெள்ளம், உடைமைகள் அழிந்து போதல், அவலக்குரல் இவையெல்லாம் சாதாரணமானவைதான். 1980இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட யுத்தச் சூழலால் அழிக்கப்பட்ட மனித உயிர்களும் உடைமைகளும் கணக்கில் அடங்காதவை. அவற்றின் முழுமையான பட்டியலை நாவலில் தேடமுடியாது: ஏன் அவற்றை எங்குமே காண முடியாமலும் போகலாம். அது வேறு விடயம். இங்கு வகைமாதிரியான சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மக்கள் அனுபவித்த துன்பங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

1987 மே மாதம் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் வீடு வாசல்களை விட்டு யாழ்ப்பாணத்தை

நோக்கி ஓடினார்கள். உறவுகளை விட்டு, உடைமைகளை விட்டு உயிருக்காக ஓடிக்கொண்டிருந்த வேளையில் பாதிவழியிலும் பல உயிர்கள் பறிக்கப்பட்டன. சிலர் குடும்பமாகவே அழிந்து போயினர். சில குடும்பங்களில் பல உயிர்கள் பறிக்கப்பட்டன. பலர் ஊனமாக்கப்பட்டனர். போரே நீ போ என்னும் நாவலில் இத்துயரம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

"அதிகாலை வீட்டின் மீது விழுந்து வெடித்த ஷெல்லிற்கு இரண்டு பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்... காயம்பட்டு விழுந்து கிடக்கும் தகப்பனைத் தூக்கிவர வழியற்று ஓடிவரும் பிள்ளைகள்... பாரிச வாதத்தில் படுக்கையில் கிடக்கும் தாயை அப்படியே விட்டுவிட்டு வரும் மக்கள்... குண்டு வீச்சிற்கு இரையாகிப் போன சகோதரர்களை அடக்கம் செய்யவும் முடியாது ஓடிவரும் கூடப்பிறந்ததுகள்..."[3] என ஆசிரியர் விபரிப்பது வகைமாதிரியான சில சம்பவங்களே.

சங்கானைப் பிரதேசத்தில் ஏற்பட்ட மோதல்களின் போது ஒரு குடும்பத்திற்கு ஏற்பட்ட துன்பம்,

"தகப்பனும் மூத்த மகனும் வெள்ளனவே சீவலுக்குப் போனவையாம். போன கையோடை ஷெல் அடிக்கத் தொடங்கிவிட்டான்களாம். இவயின்ர வீட்டுக்கு முன்னாலும் விழுந்து வெடித்ததாம். முத்தத்திலே நின்றிருந்த இந்த மனிசியின்ர மாமன் அப்படியே உடல் சிதறிச் சரியாம். அந்த உடலை அடக்கம் கூடச்செய்யாமல்தாய்க்காரி பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு ஓடிவந்திட்டுதாம்..."[4]

என்று கூறப்படுகின்றது.

வீட்டைவிட்டு வெறுங்கையோடு அகதிகளாக ஓடிவந்த மக்கள் நவாலியிலுள்ள தேவாலயத்தில் தஞ்சம் புகுந்து நின்றபோது தேவாலயத்தின் மீது புக்காரா விமானம் குண்டுமழை பொழிகின்றது. அதனால்,

"தலை துண்டிக்கப்பட்டோர்... இறைச்சிக் குவியலானோர்..... தேவாலய முன்றலில் எங்கும் சடலங்கள்..... கட்டிட இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கிடந்தோர்.... பிணவாடை... குருதி நாற்றம், தலையிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கதறி அழுவோர்..... எங்கும் நிறைந்திருந்தனர். செத்தவர்கள் யார்? தப்பிப் பிழைத்தவர்கள் யார் என்று தெரியாமல் அலமந்து திரிந்தோர் பலர்..... துண்டித்த கரத்தைத் தன் கணவனுடையதென அடையாளம் கண்டு தூக்கி மடியில் வைத்தபடி ஓலமிட்டழும் பெண்..... சிதறிக் கிடந்த உடுதுணியிலிருந்து தங்கள் உறவுகளை அடையாளங்கண்டு கத்தி அழுவோர்... குவிந்து கிடந்த தசைத்துண்டங்களிலிருந்து எவருடையதென அடையாளம் தெரியாமல் விம்மினோர் பலர்...." [5]

என்று இச்சம்பவத்தை ஆசிரியர் விபரிக்கின்றார். ஒரே நிமிடத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட மனித உயிர்களைப் பலிகொண்ட இச்சம்பவத்தால் யாழ்ப்பாணம் ஒருகணம் அதிர்ந்துதான் போனது.

இவற்றைவிட தனித்தனிக் குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புக்களும் ஏராளம். சங்கானையில் பனையின் வட்டுக்குள் கள்ளுச்சீவுவதற்காக இருந்த

இலட்சுமணனை பனையில் வைத்தே இராணுவம் சுட்டபோது அவன் தலைகீழாக நிலத்தில் வந்து மோதி இறந்து போகின்றான். கூடநின்ற தகப்பன் அந்த இடத்திலேயே அவனைக் கட்டைபோட்டு எரித்துவிட்டுத் தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடுகின்றார் என்று கூறும்போது அந்தத் தந்தையின் மனநிலையை எவ்வாறு புரிந்து கொள்வது.[6]

இவ்வாறே மனைவி பிள்ளைகளோடு தாழையடி அந்தோனியார் கோயில் திருவிழாவிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிவரும்போது செபஸ்தியான் மனைவியையும் பிள்ளையையும் ஷெல்லிற்குப் பலிகொடுத்து விட்டுத் தனியாக வீட்டுக்கு வருகின்றான் என்று ஆசிரியர் கூறும் போது மனித இதயங்கள் அவனுக்காக ஒருகணம் நின்றுதான் துடிக்கும்[7].

இடம்பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியிருந்த மக்கள் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றுவதற்கு முன்னர் தமது வீடுகளில் உள்ள முக்கியமான உடைமைகளையாவது எடுத்து வரவேண்டும் என்ற நோக்கில் இடையிடையே யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முயற்சி செய்தனர். சிலர் சென்று வந்தனர், பலர் சென்று திரும்ப முன்னரே ஷெல் வீச்சிற்குப் பலியாகிப் போயினர். இவ்வாறு பலியானவர்கள் கவனிப்பாரின்றி அந்த அந்த இடங்களிலேயே கிடந்து அழிந்துபோக அவர்களின் எலும்புக் கூடுகளே எஞ்சியிருந்தன. இவ்வாறான பலரில் ஒருவனான லூசியனை ஆசிரியர் தனது நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார்.[8]

யாழ்ப்பாணத்திற்குச் சென்ற லூசியன் ஷெல் வீச்சில் பலியாக சாவகச்சேரியில் இருந்த அவனது மனைவியும் பிள்ளைகளும் எதுவுமே தெரியாதவர்களாக ஏக்கத்தோடு நின்றதை இவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

வலிகாம மக்கள் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தபோது ஒருசிலர் இடம்பெயர விரும்பாததாலும் இயலாமையினாலும் தமது வீடுகளுக்குள் மறைந்திருந்தனர். சிலர் யாழ்ப்பாணத்தைவிட்டு அராலிப்பக்கமாகச் சென்று தங்கியிருந்தனர். இவ்வாறு தங்கியிருந்தவர்களில் பலர் முதியவர்களாகவும் நோயாளிகளாகவும் இருந்தனர். இவர்களுக்கு மருத்துவ வசதி எதுவுமே இல்லாததால் நோயாளர்களை மரணம் இலகுவாக அணைத்துக் கொண்டது. இவ்வாறு இறந்துபோனவர்களை சுடலைக்குக் காவிச் சென்று எரிப்பதற்குக்கூட போதியளவில் எவரும் இருக்கவில்லை. இதனால் வீடுகளிலேயே இவர்களை எரித்திருக்கின்றார்கள். அராலியில் காலமான மயில்வாகனத்தின் நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

"பக்கத்து வயல்வெளியில் கட்டையடுக்கி அதன்மீது வளத்தி தேவாரம்பாடி எரியூட்டினர். வேலிகளில் கிடந்த பட்டமரங்கள், தடிகள், மட்டைகள் எல்லாம் போட்டு அவர் சடலத்தை எரித்து முடித்தனர்"[9]

துரையப்பாவின் மனைவி தையல்முத்தாச்சியின் மரணச் சடங்கும் இவ்வாறுதான் நடைபெற்றது.

"பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சுற்றம், அயலவர்கள் என அவளைச் சூழ்ந்து நின்று அழுவதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவருமின்றி என் மனைவி வாங்கில் வளர்த்தப்பட்டிருக்கின்றாள். தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தையலின் பெருமைகளைச் சொல்லி அரற்றுவதற்கு இங்கு எவருமில்லை"[10]

என தையல் முத்தாச்சியின் பரிதாபகரமான மரணம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

மரணங்கள் மலிந்த பூமி என்னும் நாவலிலும் வலிகாம இடப்பெயர்வினால் மக்கள் அனுபவித்த துன்பங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. ஒருசில மணித்தியாலங்களுக்குள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்ற அறிவிப்பால் யாழ்ப்பாணத்திலிருந்த சுமார் ஐந்து இலட்சம் மக்களும் கொட்டும் மழையில் நனைந்தவாறு தென்மராட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். இராசையா வயதான தனது தாயைக் கைகளிலே ஏந்தியவாறு நெரிசலில் ஒருவனாக நகர்ந்து கொண்டிருந்தான். அவனின் துன்பத்தை உணர்ந்த தாய்,

"தம்பி...தம்பி...இராசையா... என்னை இப்படியே எங்காவது போட்டிட்டு நீ பிள்ளைகளோட ஓடிப்போ"[11]

என்று முணுமுணுத்ததையும் பொருட்படுத்தாமல் அவன் தாயைச் சுமந்துகொண்டு வந்தபோது நாவற்குழிப் பாலத்தில் தாழப்பறந்து வந்த பொம்பரினால் மக்கள் பயந்து ஓடியபோது இராசையாவின் தாய் நெரிசலில்

மிதிபட்டு இறந்து விடுகின்றாள். இராசையா தாயைச் சடலமாகச் சுமந்தவாறு சாவகச்சேரியை அடைகின்றான் என்று ஆசிரியர் கூறும்போது அவனின் துன்பத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கலட்டிக் கிராமத்தில் ஊரோடும் உறவுகளோடும் செல்வாக்குடன் இருந்த பார்வதி ஆச்சி இறந்தபோது ஊர் உறவுகளின்றி சுடலைக்கு எடுத்துச் செல்ல ஆட்களுமின்றி அநாதையாக இருந்த நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

"ஆச்சி எவ்வளவு ஆசைப்பட்டா... பறைமேளம் அடிச்சு பாடை கட்டி நான்குபேர் காவிச் சுடலைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டா.... இப்ப சவக்கிரியை செய்யக்கூட ஐயரில்லை. அவரும் ஆமிக்குப் பயந்து சாவகச்சேரிக்கு ஓடிப் போயிட்டார். பாடை கட்டவும் ஆளில்லை. கட்டினாலும் தூக்கிச் சுடலைக்குக் கொண்டுபோக ஆக்களில்லை.."[12] இத்தகைய நிலையில் பார்வதி ஆச்சியின் சடலம் வளவுக்குள்ளேயே புதைக்கப்பட்டதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்கள்

மக்கள் வீடு வாசல்களைவிட்டு மிகவும் பெறுமதியான உடைமைகளைக்கூட எடுக்க முடியாமல் உயிரைப் பாதுகாக்க ஓடியபோது ஆளில்லாத வீடுகளில் கொள்ளை அடிப்பதற்கும் ஒரு கூட்டம் தயாராக இருந்தது. மரணங்கள் மலிந்த பூமி என்னும்

நாவலில் இவ்வாறான பல சம்பவங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. கலட்டியில் உள்ள இரத்தினத்தின் வீட்டுக்கூரைச் சீற்றுக்களைக் கழற்றிய இளைஞர்களை மாணிக்கம் தடுக்க முற்படுகின்றார். அவர்கள்,

"......... இது உம்மடை வீடோ பிறகேன் கதைக்கிறீர்? கரைச்சல் கொடுக்காமல் அங்காலை போம்" என்று அவரைவிரட்டி விட்டு சீற்றுக்களைக் கழற்றி லொறியில் ஏற்றுகின்றார்கள்[13].

இராசலிங்கத்தின் பசுமாட்டையும் கன்றையும் ஒருவன் திருடிவந்தபோது அவர் அவனைப் பிடித்து அடித்து விடுகின்றார். அவ்வேளையில் அங்குவந்த ஒரு இளைஞன்,

"என்ன பெரியவர்.... நீர் அங்கை விட்டிட்டு வந்ததைத்தானே அவன் பிடித்து வந்தவன்.... ஆமி எடுக்கிறதை எங்கட ஆக்கள் எடுத்தா என்ன?[14] என்று கேட்டு அவனின் திருட்டை நியாயப்படுத்தியபோது ஆத்திரமுற்ற இராசலிங்கம்,

"அவன் எதிரி எடுக்கிறான்... நீங்களும் கொள்ளையடிக்கிறதோ? விசர்க்கதை பேசாதைபொடி.... யுத்தத்திலை குண்டுபட்டு என்ரை சொத்துக்கள் வீடுவாசல் அழிந்தால் பரவாயில்லை, கழற்றுகிறதும் போகட்டும். அதுக்கு முந்தி நீங்கள் கூரையைக் கழற்றுகிறதும் வீட்டுப் பொருட்களைக் கொள்ளையடிக்கிறதும் விட்டிட்டுப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. என்ன விசர் நியாயம் பேசுறாய்" [15]

என்று கூறினாலும் அவரால் இவனைத் தடுக்க முடியவில்லை. யாழ்ப்பாண வீடுகளெங்கும் இவ்வாறுதான் கொள்ளையடிக்கப்பட்டன என்பதற்கு இது ஒரு சான்று.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தனது வீட்டைப் பார்ப்பதற்காகச் சென்ற யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபருக்கு ஏற்பட்ட நேரடியான அனுபவமும் நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் செல்லும் வழியில் மைத்துனரின் வீட்டை எதிர்கொண்ட போது அங்கு தனது கண்முன்னாலேயே நடைபெற்ற சம்பவத்தை அவர் விபரிக்கின்றார்.

"நான் வீட்டை நெருங்கிய போது றக்ரர் நிறையப் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன.
வீட்டிற்குள் நால்வர் நிற்பது தெரிந்தது. எனது மைத்துனர் உள்ளே இருக்கலாம். ஸ்கூட்டரை நிறுத்திவிட்டுப் படியில் ஏறியபோது கண்ணாடிகள் உடைகின்ற சத்தம் எழுந்தது. ஓடிச் சென்றேன். ஹோலில் நின்றிருந்த ஒருவன் அடங்கா வெறியுடன் சுவரில் பதித்திருந்த அலங்கார சோக்கேசின் கண்ணாடிகளைக் காலால் எட்டி உதைத்தான்" [16]
அப்போது இது தனது மைத்துனரின் வீடு எனக் கூறிய உதவி அரசாங்க அதிபருக்கு அவர்களின் பதில்,

"அப்ப பேசாமல் போங்க.... ஆமி எடுக்கிறதை நாங்க எடுக்கிறம்?[17]
என்பதுதான். உடைமைகளைக் கொள்ளையடித்ததோடு வீட்டையும் சேதமாக்கி அழித்துவிட்டுச் செல்கின்ற

இவர்கள் யார் என்ற வினாவுக்கு உதவி அரசாங்க அதிபரின் பதில்,

"…. அவர்களை எனக்குத் தெரியவில்லை. அவர்களை எதிர்க்கவும் எனக்குத் தைரியமில்லை. அவர்கள் ரக்ரரில் ஏறி வேகமாகச் சென்றுவிட்ட பின்னர் என் மனதில் எஞ்சி நின்ற கேள்வி இதுதான். அவர்கள் ஏன் சுவர்ச் சோக்கேஸ் கண்ணாடியை உடைத்தார்கள்"[18]

அவரின் கேள்விக்கு 'உங்கட சுகபோக வாழ்க்கை அவர்களுக்குப் பிடிக்கவில்லை' என்பது நண்பனின் பதிலாக இடம்பெற்றுள்ளது.[19] ஆனால் இவை மக்களின் மனதில் ஆழமான வடுக்களை உண்டாக்கியிருக்கின்ற சந்தர்ப்பங்கள் என்பது ஏனோ உண்மைதான்.

## விரக்தியின் வெளிப்பாடு

ஊரை, உறவுகளை, வீட்டை, உடைமைகளை, விலைமதிப்பற்ற உயிர்களை எல்லாம் இழந்து நின்றபோது கண்முன்னாலேயே உடைமைகளைக் கொள்ளையடித்த போதும் வீடுவாசல்களை அழித்தபோதும் மக்கள் ஏனென்று கேட்கத் திராணியற்றவர்களாக இருந்தார்கள். வாய் பேச முடியவில்லை. ஆனால் மனங்களில் ஆயிரம் வார்த்தைகள் அலைமோதிக் கொண்டிருந்தன. அந்த மனக்குமுறல்களை செங்கை ஆழியான் ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். போரே நீ போ என்ற நாவலில் வருகின்ற துரையப்பா, வடமராட்சியில் பேரப்பிள்ளைகள் இருவரை ஷெல்லிற்குப் பலிகொடுத்தவர்;

அராலியிலிருந்து மகள் பவளமும் பிள்ளைகளும் அகதியாக ஓடிவந்தபோது அவர்களை ஆதரித்து அந்தத் துன்பத்தை நெஞ்சில் சுமந்து கொண்டவர்; நவாலியில் தேவாலயத்தின் மீது வீசப்பட்ட குண்டுகளால் நூற்றுக் கணக்கான மனித உயிர்கள் அழிந்துபோன அவலத்தைக் கண்டு மனம் கொதித்தவர்; இந்த அனுபவங்களால் ஏற்பட்ட விரக்தியால் பேரன் ராகுலன்,

"நமக்கென ஒரு நாடு..... சுதந்திரம்.... இவையெல்லாம் தேவையில்லையா?" எனக் கேட்டபோது,

"தேவைதான். ஆனால் இவற்றினைப் பெறுவதற்காக மனித இரத்தத்தால் இந்த மண்ணைக் குளிப்பாட்ட வேண்டுமென்றால் அவை எனக்கு வேண்டாம். இவ்வளவு இளம் பிள்ளைகளின் மரணத்தின் சமாதி மேட்டில்தான் இவை கிடைக்குமென்றால் எனக்கு அவை வேண்டாம்" [20] என்று யுத்தத்தை வெறுக்கின்றார். பிறிதொரு சந்தர்ப்பத்தில்,

".... இந்த மண்ணில் மரணம் என்பது கேள்வி நியாயத்திற்கு உட்பட்டதாகவில்லை. ஒருவனின் உடலைச் சன்னம் ஒன்று துளையிட்டு உயிரைப் பறித்துக் கொண்டு வெளியேறின் ஒருபகுதியினர் 'பயங்கரவாதி' எனப் பெயரிட்டனர். இன்னொரு பகுதியினர் 'துரோகி' எனப் பெயரிட்டனர். ஒவ்வொருவரும் தங்களது செயற்பாட்டிற்கு நியாயம் கற்பித்தனர். நியாயம்எப்பக்கம் என்பதல்ல முக்கியம்.

இறந்துபோன மனிதன் இந்த மண்ணில் வாழவேண்டிய உயிர் என்பதும் இந்த உலகத்தின் சகலதிற்கும் உரிமையுடையமானிடன் என்பதும்தான் எனது எண்ணம். ஓர் உயிரைப் பறிக்க எவருக்கும் உரிமை கிடையாது" [21]

என்றும் கூறும்போது அவரின் விரக்திநிலையின் உச்சத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

மரணங்கள் மலிந்தபூமி என்னும் நாவலில் வருகின்ற மாணிக்கம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். 1995 ஒக்ரோபர் 30 இல் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுமாறு கூறப்பட்டபோது அவரால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஜெகன்,

"விசர்க்கதை வேண்டாம். கெதியாய் போயிட வேணும். ஆமி வரேக்க இங்க நிக்கிறவையெல்லாரையும் துரோகிகளாகக் கணிப்பம்"[22]

எனக்கூறி எச்சரித்தபோது அவர் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றார். இரண்டாண்டுகளுக்கு முன்னர் கனடாவிலுள்ள பிள்ளைகளைப் பார்த்துவிட்டு வரலாம் என நினைத்தபோது இந்த மண்ணைவிட்டு வெளியேற அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் இப்போது இந்த மண்ணைவிட்டு வெளியேற வேண்டுமாம். அவர் சிரித்துக் கொள்கின்றார். அவரின் சிரிப்புக்கான அர்த்தம் புரிந்துகொள்ளக் கூடியதே.

சுவாமிநாதன் வசதியான வீடு வாசல்களோடு வாழ்ந்தவர். திடீரென யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றபோது,

"ஏமாத்திப் போட்டான்கள், கைவிட்டிட்டான்கள், நடுத்தெருவில விட்டிட்டாங்கள்..."[24]
என்றெல்லாம் யாரையோ திட்டுகின்றார். அவரே,

"இப்படியொரு நாளைக்கு நடக்குமெண்டு எனக்கு எப்பவோ தெரியும். குடிகாரன் சொல்லுறான் எண்டு எண்ண வேண்டாம். இப்படியொரு மழையுக்க கையில எதுவுமில்லாமல் பலநூறு வருசங்கள் எங்களோடை யாழ்ப்பாணத்தில வாழ்ந்த எங்கட சுக துக்கங்களில பங்கு கொண்ட முஸ்லிம் மக்களைத் துரத்தியடிச்சமே அவங்கள் சாபம் போட்டுக் கொண்டுதான் போனார்கள்... அந்தப்பழி... அந்தச் சாபம்... இண்டைக்கு நாங்க எல்லாரும் ஒட்டு மொத்தமாக ஓடப்போறம்"[25]
என்று தனது விரக்தியை வெளிப்படுத்துகின்றார்.

யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்ற செய்தியைக் கேள்வியுற்ற யாழ்ப்பாணத்தின் அன்றைய உதவி அரசாங்க அதிபரின் மனக்குமுறல் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மண்மீட்புப் போராட்டத்திற்காக நாங்கள் கொடுத்த விலை அதிகம். மண் மீட்கப்படவில்லை. படிப்படியாக இழந்து வருகின்றோம். நாங்கள் வாழ்ந்த இப்பிரதேசங்களைக் காடுபற்றி அழியவிடுவதற்கும் மழையிலும் வெயிலிலும் எம்மைப் பாதுகாத்து நிம்மதியாக உறங்கவிட்ட வீடுகளைச் சிதைந்த பாழடைந்த கட்டிடங்களாக எஞ்சவிடுவதற்கும் ஆயிரக் கணக்கான மனித உயிர்களை

அவமாகக் காவு கொள்வதற்கும் இந்த யுத்தம் வழிவகுத்துள்ளதென்றால் இப்படியொரு போராட்டம் அவசியந்தானா? உரிமைகளைப் பெறுவதற்கான வேறு மார்க்கமில்லையா? ஆயுத வியாபாரிகள் அப்பாவி நாட்டு மக்களைப் பலியெடுப்பதற்காக சர்வதேச சந்தையில் துப்பாக்கிச் சனியன்களை சர்வசாதாரணமாக மிதக்க விட்டுவிட்டார்கள். ஆயுதக் கலாசாரம் பூமிப்பந்தெங்கும் ஆக்கிரமித்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குப் பகுதியையும் தீவுப் பகுதிகளையும் ஆக்கிரமிப்பாளர்களிடம் கொடுத்து விட்டோம். இன்று வலிகாமம் முழுவதையும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே வளமானதும் நான்கு இலட்சம் மக்கள் செறிந்து வாழ்கின்ற மேற்குப் பகுதி முழுவதையும் சிங்கள இராணுவத்திடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு வெளியேறப் போகின்றோம்...”[26]

என்று உதவி அரசாங்க அதிபர் சிந்திக்கின்றார். அந்தச் சிந்தனையின் வெளிப்பாட்டால்,

“என் இடத்தைவிட்டு நான் ஏன் செல்ல வேண்டும், என் வீட்டை விட்டுத் துரத்த எவருக்கு அதிகாரமிருக்கிறது. என்வீட்டில் நிம்மதியாகப் படுத்துறங்க எனக்கு உரிமை இல்லையென்றால் என்வீட்டில், என் ஊரில் திரிய எனக்கு உரிமையில்லை என்றால் அவற்றினை இழப்பதன் மூலம் பெறுகின்ற சுதந்திரம் எனக்குத் தேவையில்லை. என் சுதந்திரத்தின் ஆரம்பம் என்வீடு, என் குடும்பம், அதன்பின்னர் தான் நாடு, மொழி.

கட்புலனாகாத சுதந்திரம் என்ற உணர்விற்காக கண்முன் இருக்கின்ற சொர்க்கத்தை இழக்க நான் தயாராக இல்லை. மண்ணைத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டுச் சுதந்திரம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. வீட்டுக் கூரையில் பாம்புகள் புகுந்து விட்டன என்பதற்காக வீட்டை அவற்றிடம் விட்டுவிட்டு ஊரைவிட்டு ஓடிவிட முடியாது. வீடு எங்களுடையது" [27]

எனக்கூறும் போது வீட்டை, ஊரை விட்டு வெளியேற விரும்பாத பலரின் உணர்வுகளை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

புலிகளின் நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் இருந்த போது இரவு பன்னிரண்டு மணிக்குக்கூட ஒரு பொம்பிளை றோட்டாலை தனிய வரலாம்.... என்று பேசிக்கொண்ட பலர் இந்த இடப்பெயர்வால் விரக்தியுற்று,

"ஆர் கேட்டது தமிழீழம்: நிம்தியாக இருக்க விடமாட்டான்கள். அரசோட மோத முடியுமே. எங்கயாவது கெரில்லாக்கள் அரச இராணுவத்தை வெற்றிகொண்டதாக வரலாறிருக்குதோ விசர்ப்பிள்ளைகள் எல்லாரையும் அழித்துவிட்டுத்தான் இந்த யுத்தம் முடியும், பிறகு ஆருக்குத் தமிழீழம்"[28] என்று பேசிக்கொண்டதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு மனிதர்களும் தாம் நேரடியாகப் பாதிக்கப்படும் போதே வேதனையின் உக்கிரத்தை உணர்ந்து கொள்கின்றனர். தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட யுத்தம் ஒவ்வொரு மனிதனையும் ஏதோ ஒரு வகையில் காயப்படுத்தியுள்ளது. சிலர் மாறாத வடுக்களையே

பெற்றிருக்கின்றனர். இந்த வடுக்களால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடு வசைபாடுவதாகவே அமைந்தது. தமது துன்பத்திற்கு நேரடியாக யார் காரணமாக இருந்ததாக அவர்கள் உணர்கின்றார்களோ அவர்கள்மீது வசைபாடப்படுகின்றது. இந்த வசைமொழிகளைச் சமூகத்தின் பலவேறு தரப்பினரிடமிருந்தும் கேட்க முடிகின்றது. அவற்றின் வகைமாதிரிகளில் சிலவற்றை இந்நாவல்கள் எடுத்துக்காட்டியுள்ளன.இந்த வசைமொழிகளையெல்லாம் தாங்கிக் கொண்ட போராளிகளின் தரப்பில்

"யாழ்ப்பாணத்தை இழந்தபிறகு ஒரு போராட்டம் வேணுமோ? இனி இழக்க என்ன இருக்கிறது" [29]

என்ற வினாவுக்கு,

"பெறுவதற்கு எவ்வளவோ இருக்கிறது..... உலகத்தில் இப்படித் தியாகங்கள் செய்து போராடி வருகின்ற இளைஞர்கள் எங்குமில்லை. அவர்கள் செய்கின்ற தியாகங்களை மதிக்காமல் எங்களுக்கு ஏற்பட்ட தற்காலிக இழப்புக்களைப் பெரிதாகச் சொல்லுறியள்" [30]

என்ற பதிற்குரல் மிகவும் அமைதியாக ஒலிப்பதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

போராளிகள் ஒரு இலட்சியத்திற்காகத் தம்மைத் தியாகம் செய்தவர்கள். மக்கள் போரின் கொடுமைகளை நேரடியாக அனுபவித்தவர்கள், இந்த இருவருக்கும் அப்பால் இந்த யுத்தத்தின் மறுமுனையில் உள்ள இராணுவ வீரர்கள் எல்லோருமே யுத்தத்தை விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள் தானா? என்ற வினாவுக்கு இராணுவவீரன் ஒருவனின் பதிலாக ஆசிரியர் கூறுவது,

"யுத்தம் கூடாது.... தமிழ் மக்களுக்கு மிச்சம் பிரச்சினை இருக்குது. தமிழ் மக்களுக்குச் சிறுபான்மை என்ற வகையில் விசேஷ பிரச்சினை நிறைய உண்டு. சிங்கள மக்கள் மாதிரி அவர்களும் சரிசமனாக இங்க இல்லை.... யுத்தத்தினால சண்டையால அதைத் தீர்க்கலாமென்பது பிழை. எங்களைப் போல எத்தனை இளம் பிள்ளைகள் சாகிறம்.... அங்காலும் இங்காலும் எல்லோரும் சகோதரங்கள். அடிச்சுக் கொள்ளுறம். வாயாலே பேசணும். துவக்காலே பேசக்கூடாது."[31]

எனக்கூறும் போது அவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளாத ஒரு யுத்தத்தில் அதுவும் தனது எதிர்முனையில் உள்ளவர்களின் நியாயங்களைப் புரிந்துகொண்டும் - தமது ஆயுதங்களை அவர்களுக்கு எதிராக நீட்டும் துர்ப்பாக்கிய நிலையில் அவர்கள் இருக்கின்ற நிலையை இது எமக்கு உணர்த்துகின்றது. அவ்வாறாயின் இந்த யுத்தத்தை நடத்துபவர்கள் யார்? மாணிக்கம் கூறுவது போல,

"... அரசியல் அயோக்கியர்கள் ஆதிக்கக் கதிரைகளுக்காக தம் சந்ததியினரைப் பலிக்கடாக்களாக்கி விட்டனர். இனவாத எரிமலை குமுறத் தொடங்கிவிட்டது. இனி அதனைத் துணிகொண்டு மூடுவது சாத்தியமாகப் படவில்லை"[32]

என்பது உண்மையாக இருந்தால் போர் முனையின் இருபுறத்தில் உள்ளவர்களும் மீண்டும் ஒருமுறை சிந்திக்க வேண்டும். இந்த யுத்தம் யாருக்காக என்பது பற்றி, இவ்வேளையில் மாணிக்கம்,

"தம்பிமாரே, புத்தாமாரே பட்டதுயரம் போதும். உங்கட துப்பாக்கிகளை இனியாவது கீழை போடுங்கோ! கீழை போடுங்கோ!"[33]

என்று உரத்துக் கூவுவது மாணிக்கத்தின் குரலாக மட்டுமன்றி மரணங்கள் மலிந்துவிட்ட பூமியிலுள்ள அத்தனை ஜீவன்களதும் குரலாகவே ஒலிக்கின்றது.

## அடிக்குறிப்புக்கள்

01. செங்கை ஆழியான், (2002) போரே நீ போ, யாழ்ப்பாணம்.
02. செங்கை ஆழியான், (2000) மரணங்கள் மலிந்த பூமி, யாழ்ப்பாணம்.
03. செங்கை ஆழியான், போரே நீ போ, ப.24.
04. மேலது, ப.27
05. மேலது, ப.135 – 36
06. மேலது, ப.38
07. மேலது, ப.89
08 மேலது, ப. 136
09. மேலது, ப. 163
10. மேலது, ப. 170
11. செங்கை ஆழியான், மரணங்கள் மலிந்த பூமி, ப.35
12. மேலது, ப. 63
13. மேலது, ப. 61
14. மேலது, ப. 106
15. மேலது, ப. 106
16. மேலது, ப. 146
17. மேலது, ப.147
18. மேலது, ப. 147
19. மேலது, ப. 147
20. போரே நீ போ, ப. 76
21. மேலது, ப. 166
22. மரணங்கள் மலிந்த பூமி, ப. 14

23. மேலது, ப. 16
24. மேலது, ப. 29
25. மேலது, ப. 30
26. மேலது, ப. 50
27. மேலது, ப. 103
28. மேலது, ப. 129
29. மேலது, ப. 92
30. மேலது, ப. 92
31. மேலது, ப. 210 - 211
32. மேலது, ப. 214
33. மேலது, ப. 237

S.S.R Printers, 288B, Palaly Road, Kandarmadam,Jaffna.